Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, AUGUST 24, 2022

புதன்கிழமை, 24 ஒகஸ்ட் 2022 | ஒளி: 08 கதிர் 083 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | FREE

## சதொசவில் விலைக் குறைப்பு



லங்கா சதொச நிறுவனத்தால், நேற்று (23) முதல் அமுலுக்கு வரும் வகையில் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக சதொச நிறுவனத்தின் தலைவர் பசந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2





வட்டுவாகல் – கோட்டாபய கடற்படை முகாமுக்கான

# நில அளவீடு இடைநிறுத்தம்

## எதிர்ப்பினால் அதிகாரிகள் பின்வாங்கினர்

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு - வட்டுவாகல் பகுதியில் அமைந்துள்ள கோட்டாபய கடற்படை முகாமுக்காக பொதுமக்களின் 617 ஏக்கர் காணிகளை சுவீகரிப்பதற்கான நில அளவீடு நேற்றைய (23) முயற்சி, காணி உரிமையாளர்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பிரதேச மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டது.

அத்துடன், நில அளவீடு செய்ய வந்த நில அளவை திணைக்கள அதிகாரிகளும் திரும்பிச் சென்றனர்.

வட்டுவாகல் பகுதியில் தமிழ் மக்களுக்கு சொந்தமான 617 ஏக்கர் நிலங்களை கடந்த 13 வருடங்களாக ஆக்கிரமித்து பாரிய கடற்படை முகாமை கடற்படையினர் அமைத்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## வருட இறுதிக்குள் ஐ.எம்.எப் நிதியுதவி

### இன்று வருகிறது ஐ.எம்.எப் பணிக்குழு : பேச்சுவார்த்தைகள் தீவிரம்

பொருளாதார மற்றும் நிதி சீர்திருத்தங்கள் மற்றும் கொள்கைகள் குறித்து இலங்கை அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதற்காக ஐ.எம். எப் பணியாளர் மட்டத்திலான அதிகாரிகள் குழு இன்று (24) கொழும்பை வந்தடைவார்கள். அரச உயர் மட்டத்திலான பேச்சுவார்த்தைகள் இன்று தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தொடர்ச்சி P2

பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிரான

## எமது போராட்டம் மீளெழுச்சி பெறும்



பயங்கரவாத தடை சட்டத்தை நீக்கும் வரையில் எமது போராட்டம் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டுதான் உள்ளது. பயங்கரவாத தடைச் சட்டம் முழுமையாக நீக்கப்படும் வரையில் அது தொடரும் என தெரிவித்துள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்,

தொடர்ச்சி P2

## பூச்சிய அடிப்படையில் 2023 பட்ஜெட் தயாரிப்பு

2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு பூச்சிய (Zero - Based Budgeting) அடிப்படையில் தயாரிப்பதற்கு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

ஜனாதிபதி தலைமையில் திங்கட்கிழமை (22) கூடிய வாராந்த அமைச்சரவைக் கூட்டத்திலேயே அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



புரட்சிக்கு பங்களித்த இளைஞர்கள் மீது

## அடக்குமுறையை ஏவுகின்றது அரசாங்கம்

இந்நாட்டின் இளம் தலைமுறையினர் பாரிய புரட்சியை முன்னெடுத்ததாகவும், அதன் விளைவாகவே நாட்டை அதல பாதாளத்தில் தள்ளிய ஜனாதிபதியை பதவியில் இருந்து அகற்ற முடிந்ததாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். எனினும், அந்த பாரிய புரட்சியையும், மக்கள்

தொடர்ச்சி P2

## புத்தளம் கழுதையென சாடினார் மரிக்கார்

■ பா.நிரோஸ்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சட்டவிரோத உத்தரவுகளை நிறைவேற்றும் அரச அதிகாரிகளுக்கு எதிராக எதிர்காலத்தில் அமையும் எமது அரசாங்கத்தில் கண்டிப்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார். எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (23) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# கோட்டாவுக்கு பாதுகாப்பை வழங்குங்கள்

### இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அரசாங்கத்திடம் வலியுறுத்து



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்பத்தினர் இலங்கைக்கு திரும்புவதற்கு போதிய பாதுகாப்பை வழங்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்கு இருக்கும் சிறப்புரிமைகளுக்கு அமைய கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் சட்டப்பிரகாரம் சில சலுகைகள் மற்றும் நன்மைகளுக்கு உரித்தானவர் எனவும் மனித உரிமை ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கான பாதுகாப்பு அச்சுறுத்தலை மதிப்பிடுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுக்கவேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு, இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழு எழுதியுள்ள கடிதத்தில் இவற்றை தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

கப்ராலுக்கு எதிரான வழக்கு

## திருத்தப்பட்ட முறைப்பாட்டை நவம்பர் 11இல் சமர்ப்பிக்கலாம்

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிரான வழக்கில் திருத்தப்பட்ட முறைப்பாட்டை மன்றில் சமர்ப்பிப்பதற்காக, நவம்பர் 11ஆம் திகதி வரை வழக்கை ஒத்திவைப்பதாக கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே, நேற்று (23) உத்தரவிட்டார்.

இலங்கை அரசுக்குச் சொந்தமான 6.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை முறைகேடாகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பான வழக்கு நேற்றையதினம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

கப்ரால் சார்பில் நீதிமன்றில் ஆஜரான ஜனாதிபதியின் சட்டத்தரணி சம்பத் மெண்டிஸ், இந்த சம்பவம் தொடர்பான பூர்வாங்க ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய எதிர்பார்ப்பதாக மன்றுக்கு அறிவித்தார். குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 136(1)(a) பிரிவின் பிரகாரம் நுகேகொட நலங்காராமதிபதி தினியாவல பாலித தேரர் தனிப்பட்ட முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார்.

2014ஆம் ஆண்டு அஜித் நிவார்ட் கப்ரால் மத்திய வங்கியின் ஆளுநராக கடமையாற்றிய போது, அமெரிக்காவின் சிஐஏ நிறுவனத்தின் ஆதரவாளரான இமாத் ஷா சுபேரி என்ற அமெரிக்க வர்த்தகருக்கு மத்திய வங்கியின் ஊடாக 6.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்தியதாக முறைப்பாட்டாளர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தொடர்ச்சி P2

## குற்றம் நிரூபிக்கப்பட்டால் நட்டஈடு அறிவிடப்படும்

■ மஹேஸ்வரி விஜயனந்தன்

பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவிப்போர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு அவர்கள் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால் மாத்திரமே, ஏற்பட்ட சேதத்துக்கான நட்டஈட்டை அவர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்தன, பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்படுமாயின் அது தொடர்பில் ஆராயும் பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது என்றார்.

தொடர்ச்சி P2

உலக உணவுப் பணவீக்கம்

## பட்டியலில் 5ஆவது இடத்தில் இலங்கை

உலகளாவிய ரீதியில் உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு அல்லது உணவுப் பணவீக்கம் அதிகமாகவுள்ள நாடுகளின் பட்டியலில் ஐந்தாவது இடத்தில் இலங்கை உள்ளது என்று உலக வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் முதல் இடத்தை லெபனான் பிடித்துள்ளதுடன், சிம்பாப்வே இரண்டாம் இடத்தையும் வெனிசுவேலா, துருக்கி ஆகிய நாடுகள் மூன்றாம் மற்றும் நான்காம் இடங்களிலும் உள்ளன. இலங்கை ஐந்தாம் இடத்திலும் ஈரான், ஆஜர்ன்டீனா உள்ளிட்ட நாடுகள், பட்டியலில் இலங்கைக்கு பின்னால் உள்ளன.

தொடர்ச்சி P2

## பத்தும் கெர்னருக்கு பிடியாணை



சமூக ஊடக ஆர்வலரும் போராட்டத்தள உறுப்பினருமான டொக்டர் பத்தும் கெர்னரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு, கொழும்பு நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுனாவெல, நேற்று (23) பிடியாணை பிறப்பித்தார்.

இந்த வழக்கு தொடர்பாக அவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ள போதும் நேற்றையதினம் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, மன்றில் ஆஜராகத் தவறியதால், பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு பதிலாக

## புதிய தேசிய பாதுகாப்பு சட்டம்

■ மஹேஸ்வரி விஜயனந்தன்



பயங்கரவாத தடைச்சட்டம் இரத்து செய்யப்படவுள்ளதாகவும், அதற்கு பதிலாக புதிய தேசிய பாதுகாப்பு சட்டம் கொண்டுவரப்படும் எனவும் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான பந்துல குணவர்தன, இது தொடர்பான யோசனையை நீதியமைச்சர் அமைச்சரவையில் முன்வைத்தார் எனக் குறிப்பிட்டார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (23) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு பதிலாக புதிய தேசிய பாதுகாப்பு சட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு வருவதாகவும், இச்சட்டமூலம் இயற்றும் பணிகள் முழுமையடைந்தவுடன் எதிர்காலத்தில் பாராளுமன்றதில் முன்வைக்கப்படும். அச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதும் பயங்கரவாத தடைச்சட்டம் இரத்துச் செய்யப்படும் என்றார்.

PAGE 1 தொடர்ச்சிகள்

# நில அளவீடு இடைநிறுத்தும்

அந்த காணிகளை படை முகாமின் தேவைக்காக கடந்த சில வருடங்களாக நிரந்தரமாக சுவீகரிக்கும் பொருட்டு, பல தடவைகள் நில அளவை திணைக்களத்தால் அளவீடு செய்ய எடுத்த முயற்சிகள் மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டிருந்தது.

2017ஆண்டு ஒகஸ்ட் மாதம் 4ஆம் திகதி வெளியாகிய வர்த்தமானியின் பிரகாரம், கரைத்துறைபற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட வட்டுவாகல் மற்றும் முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியிலுள்ள 271.62 ஹெக்டேயர் விஸ்தீரனமுடைய காணி அரசால் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு, காணி உரிமையாளர்களான தமிழ் மக்களை காணி ஆவணங்களோடு வருகைதந்து, கடற்படை முகாமுக்கு காணியை வழங்க அளவீடுகளை செய்ய எல்லைகளை அடையாளம் காட்டுமாறு, நில அளவை திணைக்களத்தால் பல தடவைகள் காணி உரிமையாளர்களுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டது.

இந்நிலையில், காணி சுவீகரிப்புக்கான அளவீடுகள் மேற்கொள்ள முற்பட்டபோது தொடர்ச்சியாக மக்களின் எதிர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்தமையால், அளவீட்டு பணிகள் இடம்பெற்றிருக்கவில்லை.

இந்த நிலையில் நேற்றையதினம் (23) மீண்டும் காணி சுவீகரிப்புக்கான அளவீட்டு பணிகள் ஏற்பாடாகியிருந்த நிலையில், 15 காணி உரிமையாளர்கள் இழப்பீடுகளை பெற்றுக்கொண்டு, காணிகளை கடற்படைக்கு வழங்க இணக்கம் தெரிவித்து, அளவீடுக்கு வருகைதந்திருந்தனர்.

இந்த நிலையில், மேலும் ஒரு தொகுதி மக்கள் தமது காணிகளை சுவீகரிக்க எதிர்ப்புத் தெரிவித்து பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான ரவிகரன், சிவநேசன் ஆகியோருடன் இணைந்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்த காணி சுவீகரிப்பு தொடர்பில் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் காணி உரிமையாளர்களை அழைத்து பொதுவான ஒரு கூட்டத்தை மாவட்ட செயலகத்தில் கூட்டி முடிவுகளை எடுக்க வேண்டும் எனவும் ஏற்கெனவே காணி உரிமையாளர்களான மக்களை தனியே மாவட்டவ் செயலகத்துக்கு அழைத்து கூட்டத்தை வைத்து முடிவுகளை எடுத்த பின்னணியில் சில காணி உரிமையாளர்களுக்கு புலனாய்வுத் தரப்பினரின் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளதாக வினோ நோகராதலிங்கம் எம்.பி, நில அளவை திணைக்கள அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

மேற்குறித்த கோரிக்கை அடங்கிய கடிதமும் காணி உரிமையாளர்களின் கையொப்பத்துடன், நில அளவை திணைக்கள அதிகாரிகளிடம் வழங்கப்பட்டுள்ளது.

இதன் பின்னணியில் அளவீட்டு பணிகளை நிறுத்தி, நில அளவை திணைக்கள அதிகாரிகள் திரும்பிச் சென்றனர்.

மக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நிலையில், கலகம் அடக்கும் பொலிஸார் பிரசன்னமாக்கிருந்ததோடு, அதிகளவிலான புலனாய்வாளர்கள் போராட்டத்தில் கலந்துகொண்டவர்களை புகைப்படம் எடுத்து அச்சுறுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

# சதொசவில் விலைக் குறைப்பு

கொழும்பில் நேற்று (23) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்படி, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வெங்காயம், இறக்குமதி செய்யப்படும் சம்பா அரிசி, நாட்டரிசி, பருப்பு, கடலை, வெள்ளை அரிசி, வெள்ளை சீனி, வெள்ளைப் பூண்டு, நெத்தலி, செத்தல் மிளகாய், உருளைக் கிழங்கு ஆகியவற்றின் விலை குறைக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அதனடிப்படையில் விலைகள் குறைக்கப்பட்ட பொருட்களுக்கான ஒரு கிலோகிராம் (கி.கி) விலைகளின் விபரம்

01. உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்படும் வெங்காயம் (1கி.கி) :- 180.00
02. சம்பா (1 கி.கி) :- 194.00
03. நாட்டரிசி (1 கி.கி) :- 198.00
04. பருப்பு (1 கி.கி) :- 460.00
05. கடலை (1 கி.கி) :- 485.00
06. வெள்ளை அரிசி (1 கி.கி) :- 185.00
07. வெள்ளை சீனி (1 கி.கி) :- 298.00
08. சிவப்பு சீனி (1 கி.கி) :- 310.00
09. வெள்ளைப்பூண்டு (1 கி.கி) :- 650.00
10. நெத்தலி (1 கி.கி) :- 1375.00
11. செத்தல் மிளகாய் (1 கி.கி) :- 1690.00
12. உருளைக்கிழங்கு (1 கி.கி) :- 280.00

# வருட இறுதிக்குள் ஐ.எம்.எப் நிதியுதவி

இந்நிலையில், சர்வதேச நாணய நித்தியத்திடம் இருந்து இலங்கை பெற எதிர்பார்க்கும் கடன் உதவிகள் இந்த வருட இறுதிக்குள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார். இலங்கைக்கு வருகை தரும் ஐ.எம்.எப் பணிக்குழுவுடன் இது குறித்து இறுதிக்கட்ட தீர்மானங்கள் எட்டப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமைகளில் சர்வதேச நாணய நிதியத்தின் முழுமையான ஒத்துழைப்புடன் பயணிக்க இலங்கை அரசாங்கம் முயற்சிக்கின்ற நிலையில், வருங்கால ஐ.எம்.எப் விரிவாக்கப்பட்ட நிதி வசதி (EFF) ஏற்பாட்டின் மீது பணியாளர் அளவிலான ஒப்பந்தத்தை நோக்கி முன்னேறுவது குறித்து கலந்துரையாடும் விதமாக ஐ.எம்.எப் பணியாளர் குழு இன்று (24) இலங்கைக்கு வருகை தருகின்றனர். எதிர்வரும் 31ஆம் திகதி வரையில் பணியாளர் மட்டத்தில் முக்கிய கலந்துரையாடல்களை முன்னெடுப்பதே இவர்களின் நோக்கமாகும்.

இலங்கையின் பொதுக் கடன் உயரிய மட்டத்தில் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளதால்,ஈ. எப்.எப் திட்டத்தின் சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையின் ஒப்புதலுக்கு, கடன் நிலைத்தன்மையை மீட்டெடுக்கும் என இலங்கையின் கடனாளிகளால் போதுமான உத்தரவாதங்கள் தேவைப்படும். இந்நிலையில் ஐ.எம்.எப் ஊழியர்கள் ஏனைய பங்குதாரர்களுடன் இது குறித்து கலந்துரையாடல்களை தொடர்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இது குறித்து மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவிக்கையில், உண்மையில் நாம் சர்வதேச நாயண நிதியத்துடன் கலந்துரையாடி வருகிறோம். அதன் முதல் படியாக, அடுத்த மூன்று முதல் நான்கு ஆண்டுகளுக்கு ஒட்டுமொத்த பொருளாதாரக் கொள்கை கட்டமைப்பில் பணியாளர் அளவிலான ஒப்பந்தத்தை எட்டுவதாகும். அதற்கு நாங்கள் மிக நெருக்கமாக இருக்கிறோம் என்று கூறலாம். உள்நாட்டு கடன் இலக்குகளை அடைவதில் எந்த சிக்கலையும் நாங்கள் காணவில்லை. இதனால் உள்நாட்டு கடனை மறுசீரமைக்காமல் நிலைமையை நிர்வகிக்க முடியும்.அதேபோல் இந்த ஆண்டு இறுதிக்குள் இலங்கைக்கான ஆரம்ப நிதி உதவிகள் கிடைக்கும் என எதிர்பார்க்க முடியும். அது குறித்து இந்த வாரத்தில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்றார்.

# கோட்டாவுக்கு உரிய பாதுகாப்பை வழங்குங்கள்

வெளிநாட்டில் தற்போது வசிக்கும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய மற்றும் குடும்பத்தினர் நாட்டிற்கு பாதுகாப்பாக வருவதற்கு உரிய பாதுகாப்பை வழங்க வேண்டும் என சட்டம் தெரிவிக்கின்றது, எனவே முன்னாள் ஜனாதிபதியொருவர் நாட்டிற்கு திரும்பும்வேளை வேண்டுகோள் விடுக்கும் பட்சத்தில், இலங்கையின் சட்டத்தின் கீழ் அவருக்கு உரிய பாதுகாப்பினை வழங்கவேண்டும் எனவும் மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வெளிநாட்டில் வசிக்கும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய குடும்பத்தினர் நாட்டிற்கு திரும்புவதற்கான அடிப்படை உரிமையில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய அச்சுறுத்தல் நிலைமை குறித்து இலங்கை அதிகாரிகள் முழுமையான மதிப்பீடுகளையும் மேற்கொள்ளவேண்டும். இலங்கையின் சட்ட கட்டமைப்பிற்குள் அவ்வாறான அடிப்படை உரிமை மீறல் நிகழ்வதை தடுப்பதற்கான அனைத்து பொருத்தமான வழிமுறைகளையும் எடுத்து கோட்டாபய குடும்பத்தினர் நாட்டிற்கு திரும்புவதற்கு அனுமதிக்கவேண்டும் எனவும் இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழு ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# அடக்குமுறையை ஏவுகின்றது அரசாங்கம்

போராட்டத்தையும் முன்னெடுத்த இளம் தலைமுறையினருக்கு எதிராக அரச அடக்குமுறை ஏவப்படுவதாகவும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஊடாக அரசாங்கம் அவர்களை வேட்டையாடுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வசந்த முதலிகே உள்ளிட்ட பலருக்கு எதிராக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவல் உத்தரவு பிறப்பிக்க ஜனாதிபதியும் அரசாங்கமும் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் . அதன்மூலம் இன்று இளைஞர்களை வேட்டையாடும் யுகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். தமது சொந்த அரசியல் கருத்தை முன்வைக்கும் தவறுக்காக அரசாங்கம் , இளைஞர்களை இவ்வாறு நடத்துகிறதா என கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சித் தலைவர், அரச பயங்கரவாதத்தில் இருந்து அரசாங்கம் உடனடியாக வெளியேற வேண்டும் எனவும் தெரிவித்தார். அநீதிக்கும், அநியாயத்துக்கும், அடக்குமுறைக்கும் எதிராக முன்நிற்கும் இளைஞர் சமூகத்துடன் ஒன்றிணைந்து, ஐக்கிய மக்கள் சக்தி செயற்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை தற்போது எதிர்நோக்கி வரும் மிகவும் பாரதூரமான நெருக்கடிகளுக்கு தீர்வு காணும் நோக்கில் நவீன இலங்கையை உருவாக்குவதற்காக பொதுமக்கள் கோரும் சமூக மாற்றத்திற்கான உடன்பாட்டை எட்டுவதற்காக சீர்திருத்தங்களுக்கான தேசிய வேலைத்திட்டம் தாபிக்கப்பட்டுள்ளதுடன், கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில், இளைஞர் சீர்திருத்தங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. இளைஞர் அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல்வாதிகள், கல்வியாளர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் பலர் இதன்போது கலந்துகொண்டனர். இந்தப் பணியுடன் ஒருங்கிணைக்கப்பட்ட சீர்திருத்தங்களுக்கான செயலகமொன்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் திறக்கப்பட்டுள்ளது.

# குற்றம் நிரூபிக்கப்பட்டால் நட்டஈடு அறிவிடப்படும்

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (23) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில், காலி முகத்திடல் போராட்ட களத்தால் 49 இலட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளமை தொடர்பாகவும், இந்த நட்டத்தை யாரிடம் அறவிடுவது என்பது தொடர்பிலும் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்த அவர் ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம், ஏனைய மக்கள் பிரதிநிதிகளின் வீடுகள், சொத்துகள் உள்ளிட்டவற்றுக்கு பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளது. எனது வீடு, வாகனங்கள் எரியூட்டப்பட்டமை தொடர்பில் இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை என தெரிவித்த அவர், மே 9ஆம் திகதி வன்முறையானது, 12 மணிநேரத்தில் ஒருங்கமைக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டமை தொடர்பில் பாதுகாப்பு தரப்பு விசாரணைகளை முன்னெடுக்கின்றன என்றார்.

பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவிப்பவர்கள் தொடர்பில் அடையாளம் காணும் சந்தேக நபர்களை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தி அவர்கள் குற்றவாளியாக நிருபிக்கப்பட்ட பின்பே அவர்களிடமிருந்து நட்டஈடு அறிவிடப்படும். இதுதான் சட்டத்தின் ஒழுங்குமுறை என்றார்.

எனவே, மே 9ஆம் திகதி வன்முறை தொடர்பில் தொடர்ச்சியான விசாரணைகள் இடம்பெறுவதாகத் தெரிவித்த அவர், உங்களது வீட்டுக்குள் உங்களால் பயம், அச்சமின்றி வாழ முடியாவிட்டால், தமிழ், சிங்களம், முஸ்லிம் எவராக இருப்பினும் நாட்டின் பிரஜை என்ற ரீதியில் அது தொடர்பில் அரசாங்கம் ஆராயும் என்றார்.

# பட்டியலில் 5ஆவது இடத்தில் இலங்கை

இலங்கையில் நிலவிய உரத்தட்டுப்பாடு காரணமாக 40 முதல் 50 சதவீதமான விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டதுடன், பொருட்களை இறக்குமதி செய்வதற்கான டொலர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் உலகவங்கி தெரிவித்துள்ளது. இதேவேளை, ஜூன் மாதத்தில் 75.8 சதவீதமாக இருந்த உணவுப் பணவீக்கம் ஜூலை மாதத்தில் 82.5 வீதத்தால் அதிகரித்துள்ளது என இலங்கை மத்திய வங்கி தகவல்கள் தெரிவிக்கின்றன. ஜூன் மாதத்தில் 43.6 சதவீதமாக இருந்த உணவு அல்லாத பொருட்கள் மற்றும் சேவைகளின் பணவீக்கம் ஜூலை மாதத்தில் 52.4 சதவீதமாக பதிவாகியுள்ளது. ஜூலை மாதத்தில் 66.7 சதவீதமாக பணவீக்கம் அதிகரித்ததுடன், இலங்கையில் இதுவரை பதிவான அதிகூடிய பணவீக்க வீதமாகவும் இது கருதப்படுகிறது.

# பூச்சிய அடிப்படையில்...

நீண்டகாலமாக அரச வருமானம் குறைந்து, அரச செலவினங்கள் அதிகரித்துள்ளமையால் ஏற்பட்டுள்ள அரச நிதிச் சமநிலையற்றதன்மை தற்போது தீவிரமான பொருளாதார நெருக்கடியாக மாறியுள்ளது.

அதனுடன் தொடர்புடைய பொருளாதார சவால்களின் மத்தியில் 2023-2025 இடைக்கால வரவு- செலவுச் சட்டகத்தில் 2023 ஆண்டுக்கான வரவு- செலவைத் திட்டத்தைத் தயாரிக்கும் போது மிகவும் புத்திகூர்மையுடனும் மற்றும் மூலோபாய ரீதியான அணுகுமுறையுடனும் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிச் சூழல் மேலும் மோசமடையாமல் தடுத்தல் மற்றும் எதிர்கால நிலைபேற்றுத் தன்மைக்கு அடித்தளமிடும் வகையில் தயாரித்தல் வேண்டும்.

அதற்கமைய, 2023-2025 இடைக்கால வரவு செலவுச் சட்டகத்தில் அடைவதற்கு எதிர்பார்க்கப்படும் அரச நிதி இலக்குகளின் அடிப்படையில் தற்போது மொத்த தேசிய உற்பத்தியின் 0 சதவீதமாகவுள்ள அரச வருமானத்தை 11.3 சதவீதமாக அதிகரித்தல், 18.9 சதவீதமாகவுள்ள அரச செலவினங்களை 18.1 சதவீதமாகக் குறைத்தல், ஆரம்ப வரவு- செலவு மீதி மறை 4 சதவீதத்திலிருந்து மறை 1 சத வீதத்திற்கு குறைத்தல் மற்றும் வரவு -செலவு இடைவெளி மறை 9.9 சதவீதத்திலிருந்து 6.8 சதவீதமாகக் குறைத்தல் போன்ற இலக்குகளை 2023 ஆம் ஆண்டு வரவு- செலவு மூலம் பூர்த்தி செய்து கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது என அமைச்சரவை யோசனையில் தெரிவிக்கப்படுகின்றது.

# புத்தளம் கழுதையென சாடினார் மரிக்கார்

எங்களால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எங்களது விருப்பதற்கு அமையவே செயற்படுவார் என புத்தளத்தில் உள்ள கழுதை ஒன்று கூறுகிறது. அப்படியாயின் மொட்டுக் கட்சியினர் விருப்பத்துக்கு ஏற்றவகையிலா ஜனாதிபதி செயற்படுகிறார் எனவும் கேள்வி எழுப்பினார்.

போராட்டங்கள் அரசாங்கத்துக்கு எதிரான சதி என்றால், போராட்டத்தின் ஊடாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பதவி விலகியமை, போராட்டத்தின் ஊடாக ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டமை என்பனவும் சட்டவிரோதமானது எனவும் தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க மீண்டும் வாக்குகளால் ஜனாதிபதியாகப் போவதில்லை. அதேபோல் ஜனாதிபதியாக இன்னும் இரு வருடங்களுக்கு மாத்திரமே ரணில் இருக்கப்போகிறார் என்பதை அரச அதிகாரிகள் நினைவில் கொள்ள வேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சட்டவிரோத உத்தரவுகளை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# பத்தும் கெர்னருக்கு பிடியாணை

ஜூலை மாதம் 13 ஆம் திகதி பத்தரமுல்ல பொல்துவ சந்தியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் இடம்பெற்ற வன்முறைகள் குறித்து காலிமுகத்திடல் போராட்டத்தளத்தின் உறுப்பினர் கெர்னருக்கு எதிராக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

பொல்துவ சந்தியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் 50 நபர்களை அடையாளம் காண பொதுமக்களின் உதவி கோரப்பட்டுள்ளதாக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு மன்றுக்கு அறிவித்தது.

மேலும், சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் மன்றின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதையடுத்து, வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 29ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என நீதவான் அறிவித்தார்.

## கஜமுத்துக்களுடன் நால்வர் கைது

இரண்டு கோடி ரூபாய் பெறுமதியான இரண்டு கஜமுத்துக்களுடன் கண்டியில் நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கண்டி நகரிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றில், இந்த கஜமுத்துக்களை விற்க முயற்சித்த போதே, சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய, பொலிஸ் விசேட படையினரின் ஒத்துழைப்புடன் நேற்று (23) பகல் முன்னெடுக்கப்பட்ட விசேட நடவடிக்கையின் போது, சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.கைதுசெய்யப்பட்ட நால்வரும் 24- 26 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்றும் இவர்கள் கண்டி- கிரிபத்கும்பர பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன் குறித்த கஜமுத்துக்கள் இரண்டும் மொனராகலை பிரதேசத்திலிருந்து தமக்கு கிடைத்ததென சந்தேகநபர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

# ஏமது போராட்டம் மீழெழுச்சி பெறும்

அண்மைக் காலமாக நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நகரம் நகரமாக முன்னெடுத்த எமது போராட்டத்தை இடை நிறுத்தியிருந்தாலும் கூட, கிராமங்களில் அது தொடர்ந்து நடைபெற்றது. இப்போது மீண்டும் பயங்கரவாத தடை சட்டத்தின் அத்துமீறிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற காரணத்தினால் மீண்டும் நாடு பூராகவும் இப் போராட்டம் விரைவில் மீழெழுச்சி பெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# திருத்தப்பட்ட முறைப்பாட்டை நவம்பர் 11இல் சமர்ப்பிக்கலாம்

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால், அரசியலமைப்பின் 150ஆவது சரத்தை மீறி, பாராளுமன்றம் மற்றும் அமைச்சரவையின் முன் அனுமதியின்றி 6.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்தியுள்ளதாக முறைப்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

வல்வெட்டித்துறை

# நகர சபைக்கு புதிய தவிசாளர்

■ எம். றொசாந்த்



வல்வெட்டித்துறை நகர சபையின் தலைவராக தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர் இராமச்சந்திரன் சுரேன் தெரிவாகியுள்ளார்.

வல்வெட்டித்துறை நகர சபைக்கான தவிசாளர் தெரிவு, நகர சபை மண்டபத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (23) இடம்பெற்றது.

இதன்போது தமிழர் விடுதலை கூட்டணி உறுப்பினருக்கு ஆதரவாக, ஈழமக்கள் ஜனநாயக கட்சி உறுப்பினர்கள் இருவர், ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி உறுப்பினர் ஒருவர், சுயேட்சை குழுவை சேர்ந்த நால்வர், விடுதலைக் கூட்டணி உறுப்பினர் ஒருவர் ஆகிய 8 வாக்குகள் அளிக்கப்பட்டன.

இவருடன் போட்டியிட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர் க.சதீஸ்க்கு ஆதரவாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஆறு பேரும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியினர் இருவருமாக 08 வாக்குகள் அளிக்கப்பட்டன.

அதேவேளை, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவர் சபைக்கு சமூகமளிக்கவில்லை. அந்நிலையில், தவிசாளர் பதவிக்கு போட்டியிட்ட இருவரும் 08 வாக்குகளை பெற்று சமநிலையாக காணப்பட்டமையால், திருவுள சீட்டு மூலம் தமிழர் விடுதலை கூட்டணி உறுப்பினர் இ.சுரேன் தவிசாளராகத் தெரிவானார்.

ரணிலின் வீட்டில்

# மதுபானம் திருடியவருக்கு விளக்கமறியல்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமராக பதவி வகித்தபோது, அவரின் தனிப்பட்ட இல்லம் எரியூட்டப்பட்ட தினத்தன்று, அங்கிருந்து வெளிநாட்டு மதுபான போத்தல்களை திருடிய சந்தேகநபரை இன்று (24) வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே, நேற்று (23) உத்தரவிட்டார்.

குறித்த குற்றச்சாட்டு தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர், கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கிளி. நகைக்கடை கொள்ளை சம்பவத்தின்

# பிரதான சந்தேகநபர் தமிழகத்தில் அகதி

■ எம்.றொசாந்த்

இலங்கையில் இருந்து கடந்த இரு நாள்களில் தமிழகம் சென்று தஞ்சம் கோரியுள்ள 16 பேரில் ஒருவர், கொள்ளை சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் என பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் இருந்து ஞாயிற்றுக்கிழமை (21) மற்றும் நேற்று முன்தினம் (22) ஆகிய இரு நாள்களில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலையை சேர்ந்த 06 குடும்பங்கள், தனுஷ்கோடி பகுதியைச் சென்றடைந்தனர்.

குறித்த 06 குடும்பங்களை சேர்ந்த 16 பேரிடமும் தமிழக கடலோர காவல் படையினர் மற்றும் க்யூ பிரிவு பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை, தஞ்சம் கோரி சென்றவர்கள் தொடர்பில் இலங்கை பொலிஸாரும் மேற்கொண்டுள்ள விசாரணைகளின் அடிப்படையில் 16 நபர்களில் ஒருவர், கிளிநொச்சி பகுதியில் உள்ள நகைக்கடை ஒன்றை உடைத்து நகைகளை கொள்ளையடித்த குற்ற செயலின் பிரதான சந்தேகநபர் எனக் கண்டறிந்துள்ளனர்.

குறித்த நபர், நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டு, வழக்கு விசாரணைகள் நீதிமன்றில் நிலுவையில் உள்ள நிலையில் இலங்கையில் இருந்து தமிழகம் தப்பி சென்றுள்ளார் என பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏனையவர்கள் தொடர்பிலும் இலங்கை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மணல் மாஃபியாவை ஒழிக்க நடவடிக்கை

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்



மணல் வியாபாரத்தில் நிலவும் மாபியாக்களின் தலையீடு மற்றும் முறைகேடுகளை ஒழித்து, நியாயமான சேவைகளை மக்களுக்கு வழங்கும் நோக்கில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுற்றாடல்துறை அமைச்சர் இஷட்.ஏ. நஸீர் அஹமட் தெரிவித்தார்.

அமைச்சின் செயற்பாடுகளை வினைத்திறனாக்கும் வகையில் சுற்றாடல்துறை அமைச்சால் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். வாராந்தம் இவ்வாறான கூட்டங்களை நடத்துவதற்கு சுற்றாடல் அமைச்சின் அதிகாரிகளுக்கு தான் பணிப்புரை விடுத்துள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக அதிகாரிகாரிகளுடனான சந்திப்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், "கட்டடப்பணிகளுக்குத் தேவையான மண்ணை முறையாக விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, மணல் அகழ்வுத் தொழிலில் ஈடுபடுவோர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், இன்னும் அதற்காக அனுமதி வழங்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

முறையற்ற மணல் அகழ்வுகள் சூழலில் ஏற்படுத்தும் மாற்றங்கள் பற்றியும் அதனைத் தடுப்பதற்குரிய வழிவகைகள் குறித்தும் அமைச்சின் உயரதிகாரிகள் கலந்துரையாடினர். மணல் அகழ்வுகளால், சாதாரண பொதுமக்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

இடைத்தரகர்கள் தலையிடுவதால், விலைகள் தேவையற்ற வகையில் உயர்கிறது. சாதாரண வீடொன்றைக் கட்டுவதற்கு கூட, இவர்களால் மணலை பெற முடியாதுள்ளது" என்றார்.

ட்ரக்டர்கள், லொறிகளில் மணலை ஏற்றுவதை தவிர்த்து, ரயில்பெட்டிகள், ரயில் இழுவைப் பெட்டிகளில் ஏற்றுவதற்கும் இக்கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பெண் உட்பட தமிழ் அரசியல் கைதிகள்

# 46 பேரையும் விடுவிக்கவும்

■ எம்.றொசாந்த்




அண்மைக்காலத்தில் சமூக வலைத்தளங்களில் மாவீரர்களின் படங்களையும், புலிகளின் தலைவருடைய புகைப்படங்களையும் பதிவேற்றியவர்கள் கைதுசெய்யப்பட்டு, அவர்களை பிணையில் விடுவித்தனர். எனினும், இவ் விடுதலையை அரசியல் கைதிகளை விடுவிக்கும் மாயத் தோற்றத்தை ஏற்படுத்த முற்படுகின்றனரோ என்ற சந்தேகம் ஏற்படுவதாக, குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் தெரிவித்தார்.

அரசியல் கைதிகளின் உறவினர்கள், யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் (22) நடத்திய ஊடக சந்திப்பிலேயே, அவர் இதனை தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

பத்து வழக்குகளில் 22 பேரும், தண்டனை விதிக்கப்பட்டவர்கள், மேன்முறையீடு செய்தவர்கள் என 24 பேருமாக மொத்தம் 46 தமிழ் அரசியல் கைதிகள் காணப்படுகின்றனர். இதில் பெண் அரசியல் கைதி ஒருவரும் உள்ளடங்குகின்றார். தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனை தொடர்புகொண்ட போது, 46 அரசியல் கைதிகளின் விவரங்களை வழங்கியிருந்தோம்.

அதனுடைய தொடர்ச்சியாக வடமாகாணத்தினுடைய ஆளுநரையும் தொடர்புகொண்டு, அந்த விவரங்களை அனுப்பி வைத்திருந்தோம். வேறு யாரும் தொடர்பு கொள்ளும்பட்சத்தில் அந்தப் பெயர் பட்டியலைக் கையளிப்பதற்கு தயாராக இருக்கின்றோம். அரசியல் கைதிகளில் ஒரு பகுதியினரை தற்போதைக்கு விடுதலை செய்யவுள்ளதாக நீதி அமைச்சர் ஊடகங்களூடாக தெரிவித்துள்ளார். இந்த விடயத்தில் எமக்கு பாரிய சந்தேகம் காணப்படுகின்றது.

இந்த வருடம் ஏப்ரல் மாதம் புதிய மகஸின் சிறைச்சாலைக்கு சென்ற ஜனாதிபதியின் ஆலோசனை சபையின் தவிசாளர் நீதியரசர் அசோக டீ சில்வா, சொலிசிட்டர் ஜெனரல் சுசந்த கம்லத் ஆகியோர் பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களையும் வழக்குத் தாக்கல் செய்யப்படாதவர்களின் விடுதலை தொடர்பாக ஆராயவே தமக்கு உரித்துள்ளதென அரசியல் கைதிகளிடம் தெரிவித்துள்ளனர்.

தண்டனை அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள் தொடர்பாக முடிவெடுக்கும் அதிகாரம் தங்களிடம் இல்லை என்று தமிழ் அரசியல் கைதிகளுக்கு தெரியப்படுத்தியுள்ளனர். இந்தக் கூற்றும் எமக்கு பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது.

புலம்பெயர் தேசத்திலுள்ள 361 பேர் இலங்கை அரசாங்கத்தின் கறுப்பு பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு இருக்கின்றனர். அதை செய்ய கூடியதாக இருந்தால், அது நடைமுறைக்கு வருமாக இருந்தால், கண்ணுக்கு முன்னால் இருக்கின்ற தமிழ் அரசியல் கைதிகளை ஏன் விடுவிக்க முடியாது. அவர்களை விடுதலை செய்யும் பட்சத்தில் அது தொடக்கப்புள்ளியாக இருக்கும் என்றார்.

# சஜித் கேட்டதையே அநுரவும் கேட்கிறார்

■ பா.நிரோஸ்



நாட்டில் முன்னெடுக்கப்படும் போராட்டங்களில் பயங்கரவாதம் இல்லை. பயங்கரவாதம் இருப்பதாக அரசாங்கம் கூறுமாக இருந்தால் அதனை அரசாங்கம் நிரூபித்துக் காட்ட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (23) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். ஆளுநர் பதவிகள் உள்ளிட்ட பதவிகளுக்காக ஐக்கிய தேசிய கட்சிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் உட்கட்சி பூசல்கள் இருக்கின்றன. இதனாலேயே சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதில் காலந்தாழ்த்தப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ அன்று தேர்தல் வேண்டும் என கேட்கும்போது, அதனை விமர்சித்த தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, தற்போது தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்கிறார். உண்மையில் யாருக்கு மூளைப் பிரச்சினை இருக்கிறது என்பது தெரியவில்லை.

எதிர்க்கட்சியாக இருப்பதற்கே மக்கள் எமக்கு வாக்களித்தனர். எனவே, ஒருபோதும் அரசாங்கத்துடன் நாம் இணையப்போவதில்லை. போராட்டத்தில் பயங்கரவாதம் இருப்பதாக எமக்குத் தெரியவில்லை. போராட்டங்களில் பயங்கரவாதம் இருப்பதாக அரசாங்கம் கூறுமாக இருந்தால் அதனை நிரூபிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# சர்வதேசம் நிராகரிப்பதை ஜனாதிபதி செய்கிறார்

■ பா.நிரோஸ்

மொட்டுக் கட்சியினரை மகிழ்விக்கவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாணவர்களுக்கு எதிராக அடக்குமுறைகளை பிரயோகித்து வருவதாகத் தெரிவிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா, இலங்கையில் முன்னெடுக்க வேண்டாம் என சர்வதேசம் வலியுறுத்துவதையே ஜனாதிபதி ரணில் செய்வதாகவும் குற்றம் சுமத்தினார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (23) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்கவாக இருக்கும்போது ஒருமாதிரியும், ராஜபக்ஷர்கள் முகாமுக்கு சென்ற பின்னர் பிறிதொரு மாதிரியும் ரணில் நடந்துகொள்கிறார். ரணில் - ராஜபக்ஷ அரசாங்கத்தின் செயற்பாடுகளை நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை. போராட்டக்காரர்கள் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். ஆனால், நாடு முழுவதிலும் பல போராட்டக்காரர்கள் அடக்குமுறைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகிறார்கள்

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் இல்லாது நாட்டை கட்டியெழுப்ப முடியாது. பயங்கரவாத தடைச் சட்டத்தை மாணவர்களுக்கு எதிராக பயன்படுத்துகிறது. ரணிலின் இது போன்ற செயலால் சர்வதேசத்தின் உதவிகள் கிடைக்காமல் போகும் எனவும் தெரிவித்தார்.


பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குமாறு

# சர்வதேச அழுத்தம்

பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்தி மாணவர் செயற்பாட்டாளர்கள் உட்பட போராட்டக்காரர்கள் பலர் கைது செய்யப்படுவது குறித்து, தொடர்ச்சியாக சர்வதேச அமைப்புகள் தமது கண்டனங்களை வெளியிட்டு வருகின்ற நிலையில், இலங்கையில் உள்ள வெளிநாட்டு தூதுவர்கள் பலரும் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கக்கோரி வலியுறுத்தியுள்ளனர்.

## மனித உரிமைக்கு முரணானது

**சாரா ஹல்டன்**



இலங்கையின் அண்மைக்காலங்களில் பயங்கரவாத தடைச்சட்டம் பயன்படுத்தப்படுவதாக வெளியான தகவல்கள் குறித்து கவலையடைந்துள்ளதாக இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டமானது, மனித உரிமைகளுக்கான மதிப்புக்கு முரணான விடயம் எனத் தெரிவித்துள்ள அவர், பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவதில்லை என்ற உத்தரவாதத்தை அதிகாரிகள் பின்பற்ற வேண்டும் என வலியுறுத்த விரும்புவதாக தனது ட்விட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## சர்வதேச நியமங்களுக்கு முரணானது


**ஜூலி சங்**



பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கு ஏற்புடையதாக அமையாத சட்டங்களைப் பயன்படுத்துவது இலங்கையின் ஜனநாயகத்தை முழுமையாக அழித்துவிடும் என இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## மீள்பரிசீலனை செய்யுங்கள்

**டேவிட் மக்கினன்**



பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவதை மீள்பரிசீலனை செய்யுமாறு இலங்கை அதிகாரிகளை கேட்டுக்கொள்வதாக, இலங்கைக்கான கனடா தூதுவர் டேவிட் மக்கினன் தெரிவித்துள்ளார். பயங்கரவாத தடைச் சட்டம் ஜனநாயக நெறிமுறைகள் மற்றும் மனித உரிமைகளுக்கான மதிப்பு ஆகியவற்றுக்கு முரணான விடயமாகக் காணப்படுவதால், இலங்கை அதிகாரிகள் அதைப் பயன்படுத்துவதை கைவிடவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ரத்துச் செய்யுங்கள்

**ட்ரைன் எஸ்கடெல்**




இலங்கையில், மாணவர் செயற்பாட்டாளர்களை தடுத்து வைக்க, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பயன்படுத்தியமை குறித்து கவலையடைவதாகவும், பயங்கரவாத தடைச் சட்டம் சர்வதேச மனித உரிமைகள் தரநிலைகளுக்கு முரண்படுதாக பரவலாகக் கருதப்படுகிறது. மேலும் அதை ரத்துச் செய்ய வேண்டும் என நாங்கள் ஆரம்பத்தில் இருந்தே வலியுறுத்தி வருகின்றோம் என இலங்கை மற்றும் மாலைதீவுக்கான நோர்வே தூதுவர் ட்ரைன் எஸ்கடெல் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின்

# மூன்றாம் கட்ட நிவாரண உதவி

■ ஹஸ்பர்



இந்தியா, தமிழ்நாட்டு அரசால் வழங்கப்பட்ட மனிதாபிமான மூன்றாம் கட்ட உதவி, தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவிலும் நேற்று (23) வழங்கப்பட்டது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வேண்டுகோளிற்கிணங்க, தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இவை வழங்கப்பட்டன.

இதில், விசேட தேவையுடையவர்கள், காத்திருப்புப் பட்டியலில் உள்ளோர், சிறுநீரக நோய், இருதய நோய் கொடுப்பனவு மற்றும் காத்திருப்புப் பட்டியலில் உள்ளோர் உள்ளடங்கலாக நிவாரணப் பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக, இம்மனிதாபிமான உதவி வழங்கப்பட்டு வருகிறது. இதில் சமூக சேவை உத்தியோகத்தர் ப.சுதன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

நிந்தவூர் பிரதேச கடல் அரிப்பை தடுப்பதற்கான வழிகள்

# உயர்மட்டத்தில் ஆராய்வு

## கருங்கல் அணைக்கட்டுக்கு ரூ.10 மில். ஒதுக்கீடு

■ நூருல் ஹுதா உமர், பாறுக் ஷிஹான், எம்.எஸ்.எம். ஹனீபா





நிந்தவூர் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடல் அரிப்பைத் தடுப்பதற்கு, அதிகாரிகளுடனான உயர்மட்டக் கூட்டம், நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.எம் தாஹிர் தலைமையில், நிந்தவூர் பிரதேச சபையில் நேற்று முன்தினம் (22) இடம்பெற்றது.

இதன்போது கடலரிப்பை தற்காலிகமாக தடுப்பதற்காக முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் குறித்து, கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பொறியியலாளர் விளக்கமளித்தார்.

அத்துடன், கடலரிப்புக்கு உள்ளாகும் பிரதேசங்களையும் அங்குள்ள மக்களின் வாழ்வாதாரத் தொழில் முயற்சிகளையும் மேலும் அழிவடையாத வண்ணம் பாதுகாத்து, மீளக் கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியத்தை, நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர், அதிகாரிகளுக்கு எடுத்துரைத்தார்.

அத்துடன், கடல் அரிப்பை தடுப்பதற்காக தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் தற்காலிக பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான எரிபொருள் மற்றும் ஏனைய செயற்பாடுகளுக்குத் தேவையான நிதியை பிரதேச சபை நிதியிலிருந்து வழங்குவதாகவும் இதனைக் கொண்டு வேலைகளை துரிதப்படுத்துமாறும் பொறியியலாளரை, தவிசாளர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, நிந்தவூர் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடலரிப்பை தடுப்பதற்கான கருங்கல்லிலான அணைக்கட்டை நிர்மாணிப்பதற்கு, கடலோரம் பேணல் மற்றும் கடல் மூல வள முகாமைத்துவ திணைக்களத்தால் முதல் கட்டமாக 10 மில்லியன் ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக, நிந்தவூர் பிரதேச செயலாளர் ஏ. எம் அப்துல் லத்தீப், நேற்று (23) தெரிவித்தார்.

தொழில்வாய்ப்பு இல்லாது, அன்றாட உணவுக்கே கஷ்டப்படும்

# மாவடியம்மன் மக்கள்





■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, இராமநாதபுரம் பிரதேசத்துக்கு உட்பட்ட மாவடியம்மன் புதிய குடியிருப்பில் வாழ்ந்து வரும் 38 வரையான குடும்பங்கள், தொழில் வாய்ப்புகள் இல்லாத நிலையில், அன்றாட உணவுக்கே கஷ்டப்படுகின்றனர்.

குடிநீர், நிரந்தர வீடு, மின்சார வசதி இன்மை போன்ற இன்னல்களுக்கு மத்தியில், காட்டு யானைகள், கரடிகள் உள்ளிட்ட காட்டு விலங்குகளின் அச்சுறுத்தல் ஆகியவற்றுக்கு மத்தியிலும் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கின்றனர்.

கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாவடியம்மன், புதுக்காடு புதிய குடியிருப்பில் 38 குடும்பங்கள் தற்போது குடியேறியுள்ளன.

குறித்த பிரதேசத்தில் இருந்து, கூலி வேலைக்குச் செல்வதாக இருந்தாலும் மிக நீண்ட தூரத்துக்கு செல்ல வேண்டும். அவ்வாறு சென்றாலும் கூலி வேலைகளும் இல்லை என்றும் தெரிவித்துள்ளதுடன், பெண் தலைமைத்துவ குடும்பங்களும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

அதுமட்டுமல்லாது, இந்தப் பிரதேசத்தில் உள்ள மக்களினுடைய குடிநீர் தேவைகளுக்காக மூன்று குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டிருக்கின்ற போதும் அதில் இரண்டு கிணறுகள் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன. குறித்த ஒரே ஒரு கிணற்றில் இருந்து 38 குடும்பங்களும் பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியில் தமக்கான குடிநீர் பெற்று வருகின்றன.

அம்பாறை மாவட்ட

# சகவாழ்வு குழுக்கள் நுவரெலியா விஜயம்



■ சகா

இலங்கை உள்ளூராட்சி மன்ற சம்மேளனத்தின் ஏற்பாட்டில், அம்பாறை மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட சகவாழ்வு குழுக்கள், நுவரெலியாவுக்கு நேற்று (23) விஜயம் செய்தன.

அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு, பொத்துவில், லாகுகல ஆகிய மூவினங்களையும் பிரதிபலிக்கின்ற பிரதேச சபைகளின் சகவாழ்வு குழுக்கள், இதிலே கலந்துகொண்டன.

மூன்று சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் சகவாழ்வு குழு உறுப்பினர்கள் இந்த விஜயத்தில் பங்கெடுத்துள்ளார்கள்.

நேற்று காலை, இம் மூன்று பிரதேச சபைகளின் சகவாழ்வு குழுக்கள், காரைதீவில் இருந்து தமது பயணத்தை மேற்கொண்டன.

இலங்கை உள்ளூராட்சி மன்ற சம்மேளனத்தின் தேசிய இணைப்பாளர் பெருமாள் பிரதீப் தலைமையில், சகவாழ்வு குழுக்களின் முன்னேற்றம் பற்றி, நுவரெலியா மாநகர சபை மண்டபத்தில் இன்று புதன்கிழமை (24) கலந்துரையாடல் முன்னெடுக்கப்படவுள்ளது.

# பள்ளிவாசலில் கற்றல் நிலையம்

■ எம்.எஸ்.எம் நூர்தீன்

மட்டக்களப்பு, காத்தான்குடி பெரிய மௌலான பள்ளிவாசலினால் மாணவர்களுக்கான சுயகற்றல் நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆண் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்தும் முகமாக, காத்தான்குடி பெரிய மௌலான பள்ளிவாசல் நிர்வாகம், திறமை வாய்ந்த ஆசிரியர்களின் உதவியுடன் மாணவர்கள் சுயமாக கற்கின்ற நிலையமொன்றை பள்ளிவாசல் மேல் மாடியில் ஆரம்பித்துள்ளது.

மாணவர்களின் கல்வி, ஆன்மிகம், உளவியல் விருத்தி, ஆளுமை விருத்தி நூலகப் பயன்பாடு, வாசிப்பு திறனை வளர்த்தல் எனப் பல்வேறு திட்டங்களை நோக்கமாகக் கொண்டு, பல்வேறு கல்வியியலாளர்களின் உதவியுடன் இச்சுயகற்றல் நிலையம் இயங்க இருக்கின்றது.

பல ஆசிரியர்களின் நேரடி மேற்பார்வையின் கீழ், இயங்கவுள்ள இத்திட்டமானது, வாரத்தில் ஐந்து நாள்களும் மாலை 6 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

ஆரம்பத்தில் ஆண்டு 10, 11 கற்கின்ற மாணவர்களை கொண்டு இது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் அங்குரார்ப்பன ஆரம்ப நிகழ்வு, பள்ளிவாசலின் தலைவரும் சமூக செயற்பாட்டாளருமான அக்பர் தலைமையில் நேற்று முன்தினம் (22) மாலை நடைபெற்றது.

இதில் காத்தான்குடி மத்திய கல்லூரியின் அதிபர் எம்.சி.எம்.ஏ.சத்தார், காத்தான்குடி சித்தீக்கியா பெண்கள் அரபுக் கல்லூரியின் அதிபர் எம்.ஐ.அப்துல் கபூர், பிஸ்மி நிறுவனத்தின் பணிப்பாளர் ஏ.பி.அக்ரம் நழீமி ஆகியோர் கலந்துகொண்டனர்.



மாந்தையில் காணி

# ஆவணங்கள் வழங்கல்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்



முல்லைதீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் காணி ஆவணங்கள் நீண்ட காலமாக வழங்கப்படாத நிலை காணப்பட்டது.

தற்போது மீள்குடியேறிய மக்களுக்கான காணி ஆவணங்களை வழங்கும் செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, மாந்தை கிழக்கு பிரதேசத்துக்கு உட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகள் ரீதியாக காணிக்கான நடமாடும் சேவைகள் நடத்தப்பட்டு, காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வன்னி விளாங்குளம் கிராம அலுவலர் பிரிவு மற்றும் அம்பாள்புரம் கிராம அலுவலர் பிரிவு ஆகியவற்றில் வசிக்கும் மக்களுக்கான காணி ஆவணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் செல்வி றஞ்சனா நவரட்ணம், பிரதேச செயலக காணி அபிவிருத்தி உத்தியோகத்தர், பொறுப்பான கிராம அலுவலர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு, காணி ஆவணங்களை வழங்கி வைத்தனர்.

அதிக விலைக்கு

# முட்டை விற்ற மூவருக்கு வழக்கு




■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் அதிக விலைக்கு முட்டைகளை விற்பனை செய்த வர்த்தகர்கள் மூவருக்கு எதிராக யாழ். மாவட்ட பாவனையாளர் அதிகார சபையினரால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கோழி முட்டைகளுக்கான கட்டுப்பாட்டு விலை வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளது. அதில் வெள்ளை நிற முட்டை 43 ரூபாயும், பழுப்பு நிற முட்டை 45 ரூபாய்க்கும் விற்பனை செய்ய விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், முட்டைகளின் விலைகளை கட்டுப்பாட்டு விலைக்குள் விற்காது, அதிக விலைக்கு வர்த்தகர்கள் விற்பனை செய்வதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில், யாழ்ப்பாணம், திருநெல்வேலி, கல்வியங்காடு போன்ற பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் யாழ். மாவட்ட பாவனையாளர் அதிகார சபையினர் நேற்று முன்தினம் (22) திடீர் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

அதன்போது, அதிக விலைக்கு கோழி முட்டை விற்பனை செய்த மூன்று வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், எதிர்வரும் காலங்களில் வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என யாழ்.மாவட்ட பாவனையாளர் அதிகார சபையினர் தெரிவித்தனர்.

அம்பாறை மாவட்டத்தில்

# காட்டு யானைகளின் தொல்லை அதிகரிப்பு



■ பாறுக் ஷிஹான்

அம்பாறை மாவட்டத்தின் அட்டாளைச்சேனை, சம்மாந்துறை, நாவிதன்வெளி, கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர் பிரதேசங்களில் மீண்டும் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளதாகவும் இதனை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நற்பிட்டிமுனை, அஷ்ரப் நகர் ஆகிய பகுதிகளில் காட்டு யானைகளின் தொல்லையால் மக்கள் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டுள்ளனர்.

மாலை மற்றும் இரவு வேளைகளில் கிராமங்களுக்குள் உட்புகும் யானைகளால் குடியிருப்பு பகுதி, சிறுபோக நெற்செய்கை நிலங்கள் பெருமளவான பயன்தரு மரங்கள், பயிர்கள் என்பவற்றை அழித்து வருகின்றன.

இந்தப் பகுதிகளில் காட்டு யானைகளைக் கட்டுப்படுத்த கடந்த காலங்களில் யானை வெடிகளை வனஜீவராசி திணைக்களம் பொதுமக்களுக்கு வழங்கியது.

எனினும், யானைகளின் அச்சுறுத்தல் தொடர்ந்த வண்ணமே உள்ளதுடன், யானைகளைக் கட்டுப்படுத்துவதுக்கு மாற்று வழியை ஏற்படுத்தித் தருமாறும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சட்டவிரோத

# மணல் அகழ்வு; ஒருவர் கைது

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்

மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸ் பிரிவில் அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி, மணல் அகழ்வில் ஈடுபட்ட ஒருவர், உழவு இயந்திரத்துடன் கைது செய்யப்பட்டுள்ளார் என வவுணதீவு பொலிஸார் தெரிவித்தார்.

தாண்டியடி பகுதியில், அனுமதிப்பத்திர சட்ட விதிமுறைகளை மீறி, உழவு இயந்திரப் பெட்டியில் மணல் ஏற்றியபோது பொலிஸார் அவரைக் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் கைதுசெய்யப்பட்ட நபரையும் உழவு இயந்திரத்தையும் மட்டக்களப்பு நீதிமன்றில் ஆஜர்படுத்தி, சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்ட உள்ளதாகவும் வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.









## சங்காபிஷேகம்...

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தினுள் அமைந்துள்ள ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் கோவில் மண்டலாபிஷேக பூர்த்தி சங்காபிஷேகமும், சமயத் தலைவர்களான ஆறுமுக நாவலர், சேர். பொன் இராமநாதன் ஆகியோரின் உருவச் சிலைகள் திறப்பும் நேற்று செவ்வாய்க்கிழமை (23) காலை நடைபெற்றது.

(படங்கள்: எம். றொசாந்த்)



யாழ். மாநகர சபையில்

# நீல உடை அணிந்த ஊழியர்கள் பணியில்

■ எம்.றொசாந்த்

நல்லூர் மகோற்சவ திருவிழாக்களின் போது, நீல உடை அணிந்த மாநகர சபை ஊழியர்கள் மீண்டும் பணியில் ஈடுபடுவார்கள் எனவும், அதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும், யாழ்.மாநகர மேயர் வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (22) நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில், "திருவிழாவுக்கு அதிகளவானோர் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால், நீல உடை அணிந்த மாநகர சபையின் விசேட அணி, வீதி ஒழுங்குகளைப் பேணி, போக்குவரத்து நெரிசல்களை தவிர்க்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பார்கள் என்றார்.

# கட்டுப்பாட்டு விலைக்கு விற்க முடியாது

## ஹட்டன் பிரதேச முட்டை வர்த்தகர்கள் தெரிவிப்பு

ரஞ்சித் ராஜபக்‌ஷ



அரசாங்கத்தால் முட்டைக்கான நிர்ணய விலை அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், குறித்த விலையின் கீழ், தம்மால் முட்டையை விற்பனை செய்ய முடியாது என, ஹட்டன் பிரதேச வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

முட்டை உற்பத்தியாளர்கள் தமக்கு 55- 60 ரூபாய்க்கே மொத்த விற்பனை விலையில் விநியோகிப்பதாகவும் அதற்கமையவே முட்டையை விற்பனை செய்ய முடியும் என்றும் தெரிவிக்கின்றனர்.

முட்டை விலையை கேட்கும் நுகர்வோர் விலையை கூறியதும் முட்டையை கொள்வனவு செய்யாமல் செல்வதாகவும் எனவே, கையிருப்பிலுள்ள முட்டைகள் முடிவடைந்த பின்னர், முட்டை உற்பத்தியாளர்கள் குறைந்த விலைக்கு முட்டையை விநியோகித்தால் தாமும் முட்டையின் விலையை குறைப்பதாக தெரிவித்துள்ளனர்.

# ஐரோப்பிய சந்தைகளில் கண்டி சேலைன்கள்

சேஹ்றன் செனவிரத்ன







ரோபோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, சேலைன் உற்பத்தி செய்யப்படும் தொழிற்சாலை இலங்கையில் முதற்றடவையாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இங்கு தயாரிக்கப்படும் சேலைன் ஐரோப்பிய சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட உள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கண்டி, பல்லேகலையில் உள்ள இலங்கை முதலீட்டு சபையில் அமைக்கப்பட்டுள்ள இத்தொழிற்சாலை, முற்றிலும் ரோபோ தொழில்நுட்பத்தில் 24 மணிநேரமும் இயக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்பது பில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள இத் தொழிற்சாலையில் 55 மில்லியன் சேலைன் போத்தல்களை வருடாந்தம் தயாரிக்க முடியும். இதுவரை இலங்கையின் சேலைன் போத்தல் தேவையில் வருடாந்தம் 15 மில்லியனை குறித்த தொழிற்சாலையிலிருந்து பெற்றுக்கொள்ள அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

தற்போது இங்கு தயாரிக்கப்படும் சேலைன்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதுடன் ஐரோப்பிய சந்தையின் இதனை வெற்றி கொள்வதற்கான எதிர்பார்ப்புடன், ஐரோப்பிய தர சான்றிதழை பெறுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

ISO 45000 9001, 14000 தரச்சான்றிதழைப் பெற்றுள்ள இத்தொழிற்சாலையானது, கடந்த சில வருடங்களில் நாடுமுழுவதும் 11 தொழிற்சாலைகளை அமைத்துள்ளது. இத்தொழிற்சாலையில் 280 பேர் நேரடி வேலைவாய்ப்புகளையும் 325 பேர் மறைமுக தொழில்வாய்ப்புகளையும் பெற்றுள்ளனர்.

மொக்கா சிறுமியின் மரணம்

# உரிய விசாரணை வேண்டும்

## மொக்கா தோட்ட மக்கள் கோரிக்கை

எஸ்.கணேசன்



வீட்டுவேலைக்கு சென்ற இடத்தில் நீச்சல் தடாகத்தில் விழுந்து உயிரிழந்தார் எனக் கூறப்படும் மலையக சிறுமியின் உடலம், மஸ்கெலியா, மொக்கா தோட்டத்திலுள்ள பொது மயானத்தில் நேற்று முன்தினம் (22) அடக்கம் செய்யப்பட்டது.

மஸ்கெலியா, மொக்கா கீழ்ப்பிரிவு தோட்டத்திலுள்ள 16 வயதான ரமணி என்ற சிறுமி, ஆறு மாதங்களுக்கு முன்னர் வீட்டு வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்.

பிரபல அரசியல்வாதி ஒருவரின் உறவினரின், கம்பஹாவில் உள்ள வீட்டிலேயே பணி புரிந்துள்ளார்.

சுமார் ஆறு மாதங்கள் வரை, அங்கு வேலைசெய்து வந்த நிலையில், கடந்த 19 ஆம் திகதி உயிரிழந்துள்ளார். நீச்சல் தடாகத்தில் விழுந்து மூச்சுத் திணறல் ஏற்பட்டதாலேயே மரணித்துள்ளார் எனக் கூறப்படுகின்றது. விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

உயிரிழந்த சிறுமியின் தந்தை, அவரை சிறுவயதிலேயே விட்டு சென்றுள்ளார். தாயும் மறுமணம் முடித்துள்ளார். இதனால் மாமாவின் அரவணைப்பில் இவர் வளர்ந்து வந்தார்.

சிறுமியின் மரணம் தொடர்பில் உண்மை கண்டறியப்பட வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.









# ஆண்டு நிறைவு விழா...



மாத்தளை சுவாமி விபுலானந்த சபையின் ஆண்டு நிறைவு விழா, நேற்று முன்தினம் (22) மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது மாணவர்கள், சமூக செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களை கௌரவிக்கும் நிகழ்வு, மாத்தளை மாநக ரசபை மேயர் எஸ். பிரகாஸ் தலைமையில் நடைபெற்றதுடன், மாத்தளை சுவாமி விபுலானந்த சபையின் தலைவர் ஏ. யோகராஜன், செயலாளர் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர்.

(மஹேஸ் கீர்த்திரத்ன)

மண்ணெண்ணெய் விலையை

# மறுபரிசீலனை செய்யவேண்டும்



மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பால் தோட்டப்புற மக்கள், மீனவர்கள், குறைந்த வருமானம் கொண்டவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர் என, இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பாரிய விலை அதிகரிப்பை, மின்சக்தி எரிசக்தி அமைச்சு மேற்கொள்வதற்கு கண்டனத்தை வெளியிடுவதுடன், மண்ணெண்ணெயை பெற்றுக்கொள்வதில் மக்கள் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். எனவே இவ்விலை அதிகரிப்பு குறித்து, எரிசக்தி அமைச்சு உடனடியாக மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றார்.

பெருந்தோட்ட மக்கள், தமது அன்றாட தேவைகளுக்கும் உற்பத்தி நடவடிக்கைகளுக்கும் மண்ணெண்ணெயை அதிகளவில் பயன்படுத்துகின்றனர். இதேபோன்று, பொருளாதார ரீதியாக பின்தள்ளப்பட்ட குறைந்த வருமானத்தை கொண்ட தரப்பினரும் மண்ணெண்ணெயை நம்பித்தான் தமது பணிகளை முன்னெடுக்கின்றனர்.

ஆகவே, எரிசக்தி அமைச்சு உடனடியாக இந்த விலை அதிகரிப்பு தொடர்பில் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

மீனவர்களின் வாழ்வாதாரம் முழுமையாக மண்ணெண்ணெயை நம்பிதான் உள்ளது. மண்ணெண்ணெய் விநியோகம் சீராக இடம்பெறாமையால் அவர்களது பணிகள் கடந்த சில மாதங்களாக கடுமையாக பாதிப்புக்கு உள்ளாகியிருந்தது. கடல் உணவுகளின் விலைகளும் பாரிய அளவில் அதிகரித்திருந்தன.

இந்நிலையில், 87 ரூபாயாக இருந்த மண்ணெண்ணெய் 253 ரூபாயால் அதிகரிக்கப்பட்டு, தற்போது 340 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இது நான்கு மடங்கு விலை அதிகரிப்பாகும். மண்ணெண்ணெயை நம்பி வாழ்வாதாரத்தை மேற்கொள்ளும் அனைத்து மக்களும் இதனால் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் என்றார்.

கேகாலையில் விட்டமின்களை உண்ட பின்னர்

# 13 ஆடுகள் உயிரிழந்தன

என்.ஆராச்சி



கேகாலை கால்நடை வைத்திய பிரிவுக்குட்பட்ட கோலிந்த தோட்டத்தில் வளர்க்கப்பட்ட ஆடுகள் திடீரென உயிரிழந்துள்ளன.

இந்த மாதம் 14ஆம் திகதியிலிருந்து கேகாலை பிரதேசத்திலுள்ள விலங்கு உணவு வர்த்தக நிலையமொன்றிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட விட்டமின் மருந்தை வழங்கிய பின்னரே, 13ஆடுகள் உயிரிழந்துள்ளதாக உயிரிழந்த ஆடுகளின் உரிமையாளர் சாந்தகுமார் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னரும் கேகாலை, நாகொல்ல பிரதேசத்தில் திடீரென 17 ஆடுகள் உயிரிழந்ததாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் கேகாலை பகுதிக்கு பொறுப்பான கால்நடை வைத்தியரிடம் வினவியபோது, உயிரிழந்த ஆடுகளின் உடற்பாகங்களை பேராதனை மிருக வைத்திய ஆய்வு கூடத்துக்கு அனுப்பியதாகவும், அதன் அறிக்கைக்கு அமைய பக்டீரியா, வைரஸ் அல்லது ஒட்டுண்ணி அல்லாத மூளைக் காய்ச்சலால் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றார்.

மேலும் குறித்த ஆடுகளுக்கு வழங்கப்பட்ட உணவுகளின் மாதிரியை பேராதனை மிருக வைத்திய ஆய்வு கூடத்துக்கு எடுத்துச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பான அறிக்கை இதுவரை கிடைக்கவில்லை என்றார்.

# மூவருக்கு குளவிக்கொட்டு

ரஞ்சித் ராஜபக்‌ஷ



தேயிலைக் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த பெண்கள் மூவர் குளவிக்கொட்டுக்கு இலக்காகி, பொகவந்தலாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று (23) பகல் இச்சம்பவம் இடம்பெற்றதுடன், இதில் கர்ப்பிணி ஒருவரும் உள்ளடங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொகவந்தலாவை - பிரிட்வெல் தோட்டத்தைச் சேர்ந்த 3 பெண்களே இவ்வாறு குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

இதேவேளை குறித்த கர்ப்பிணியை அதிகமான குளவிகள் கொட்டியுள்ளதால் அவர் பொகவந்தலாவை வைத்தியசாலையிலிருந்து டிக்கோயா- கிளங்கன் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் என வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்துள்ளன.

வைத்திய அனுமதியின்றி மருந்துகளை விற்ற

# மருந்தக உரிமையாளருக்கு அபராதம்

பாலித ஆரியவன்ஸ

வைத்தியர்களின் பரிந்துரையுடன் வைத்தியர்களின் நேரடி கண்காணிப்பில் வழங்கப்பட வேண்டிய மருந்துகளை, எவ்வித அனுமதியுமின்றி விற்பனை செய்த பதுளையிலுள்ள மருந்தகம் ஒன்றின் உரிமையாளருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பதுளை நீதவான் டபிள்யூ. என். டி சில்வாவாவின் உத்தரவின் பிரகாரம், அந்தச் சந்தேகநபரிடமிருந்து ஒன்றரை இலட்ச ரூபாய் அபராதத் தொகை நேற்று முன்தினம் (23) அறவிடப்பட்டுள்ளது.

அத்துடன், சந்தேகநபர் கடுமையாக எச்சரிக்கப்பட்டு உள்ளதுடன், அவரது மருந்தக அனுமதிப்பத்திரம் தொடர்பில், தேசிய மருந்தக அதிகாரசபைக்கு அறிவிக்கவுள்ளதாகவும் நீதவான் தெரிவித்துள்ளார்.

பதுளை மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளருக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய, பதுளை பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்தின் மருந்துகள் பரிசோதகர்களால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைக்கு அமையவே, இந்த விடயம் குறித்து தெரியவந்துள்ளது.

சுகவீனமுற்ற நிலையில் பதுளை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் நோயாளர்கள், குறித்து வைத்தியசாலையில் ஆராய்ந்து பார்த்த போது, பலர் போதைப் பொருளுக்கு அடிமையாகி இருந்தமை தெரியவந்துள்ளது.

இவ்வாறு போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்கு, வைத்தியர்களின் பரிந்துரை அல்லது நேரடி கண்காணிப்பின் கீழ் மாத்திரம் வழங்கப்பட வேண்டிய மருந்துகள், கைலகொட பிரதேசத்திலுள்ள மருந்தகம் ஒன்றில் வழங்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து குறித்த மருந்தகத்தின் உரிமையாளரும் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதால், அவரிடம் அபராதம் அறவிடப்பட்டு, நீதிமன்றத்தால் கடுமையாக எச்சரிக்கப்பட்டுள்ளார்.

தொழிலாளர்களும் அரசியல்வாதிகளும்

# திண்டாடுகின்றனர்

## இளைஞர் தலைமைத்துவமே தேவையென அறிவிப்பு

எஸ். கே. குமார்

மலையக கல்விமான்கள், மலையக சமூதாய ஆய்வாளர்கள், மலையக மக்கள் நலன் விரும்பிகள் அனைவரும், இதயசுத்தியுடன் ஒன்றிணைந்து மலையகத்தில் ஒரு புதிய இளைஞர் தலைமைத்துவத்தை உருவாக்குவதன் மூலமே, மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களின் வாழ்வாதார பிரச்சினைக்கு ஒரு தீர்வு பெறமுடியும் என மலையக மாமன்றத்தின் தலைவர் ஏ. பீ சுரேஷ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,தேயிலை தொழிலை நம்பி வாழும் தொழிலாளர்கள், வயிற்றுப் பசிக்காக திண்டாடுகின்றார்கள். அவர்களின் வாக்குகளால் பாராளுமன்றம் சென்ற தொழிற்சங்க அரசியவாதிகள், அமைச்சுப் பதவி இல்லாமல் திண்டாடுகின்றார்கள்.

தொழிலாளர்களுக்கு என்ன நடந்தாலும் பரவாயில்லை, சகலகட்சி அரசாங்கத்திலாவது அல்லது தேசிய அரசாங்கத்திலாவது அமைச்சுப் பதவிகளை பெற்றுவிட வேண்டும் என, மலையக தொழிற்சங்க அரசியல் தலைமைகள் கங்கணம் கட்டிக்கொண்டு செயற்படுகின்றார்கள்.



இந்தத் தொழிலாளர்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும் அடிமைத் தனத்திலிருந்து மீட்டெடுப்பதற்கும் மலையகத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த மலையகத்தில் படித்த ஓர் இளைஞர் தலைமைத்துவம் உருவாக வேண்டும். இந்தத் தலைமைத்துவத்தை வழி நடத்த, மலையக கல்விமான்களும் சமூக ஆய்வாளர்களும் நலன் விரும்பிகளும் இன மத கட்சி பேதங்களை மறந்து ஒன்றிணைய வேண்டும்.

இவ்வாறு ஒரு புரட்சிகரமான ஓர் இளைஞர் தலைமைத்துவம் தலையெடுத்து முன்வராவிட்டால், மலையக பெருந்தோட்ட சமூகத்தின் எதிர்கால வாழ்கை, சூன்யமாக மாறிவிடும். என்பதில் எந்தவித ஐயமும் இல்லை என்றார்.

# பெருந்தோட்ட மக்களினதும் அரசியல்வாதிகளினதும் சிந்தனையில் மாற்றம் வேண்டும்

நாட்டுக்கு அந்நிய செலாவணியை ஈட்டிக்கொடுப்பதில், மாடாய் உழைத்து, ஓடாய்த் தேயும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையின் இன்னல்களைப் பார்க்குமிடத்து, இந்த நவீன காலத்தில் இப்படியொரு சமூகம் வாழ்ந்துகொண்டு இருக்கின்றதா என, பலரும் கேள்வி கேட்கத்தான் செய்கின்றனர்.

குறைந்த வருமானத்துக்கு அதிகூடிய வேலை செய்யும் 'கௌரவ பிச்சைக்காரர்'கள் அல்லது, 'கையேந்துபவர்கள்' என்று கூறுவதிலும் தவறு இருக்காது. ஆனாலும், கடுமையான கஷ்டங்களுக்கு மத்தியில், கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி, அந்தச் சமூகத்திலிருந்து வெளியேறி, நல்ல நிலைகளில் இருப்பவர்களையும் மறந்துவிடக்கூடாது.

விடாமுயற்சியும் அர்ப்பணிப்பும் தூரநோக்கு சிந்தனையும் இருக்குமாயின், இலகுவில் முன்னேற்றம் அடைந்துவிடலாம். அவற்றை நோக்கிச் சிந்திப்பதற்குத் தூண்டவேண்டும். இல்லையேல், 'ஆமாம் சாமி' போடும் நிலைமையில், மாற்றங்களை ஏற்படுத்தமுடியாது.

நகர்ப்புறங்களில், செல்வந்தர்களின் வீடுகளில் வேலை செய்வோரைப் பார்க்குமிடத்து, பெரும்பாலானவர்கள் சிறுமிகளாகவே இருப்பர். அவர்கள்தான் எதிர்த்துப் பேச மாட்டார்கள்; கூடுதலான சம்பளத்தைக் கேட்கமாட்டார்கள்; வெளியில் அழைத்துச் செல்லவேண்டிய தேவையும் இருக்காது.

இவ்வாறு சட்டவிரோதமாக, பணிப்பெண்களாக அமர்த்தப்படும் சிறுமிகளில் பலர், மர்மமான முறையில் உயிரிழந்து விடுகின்றனர். வீட்டு வேலைகளுக்காக, சிறுமிகளை அழைத்துவரும் தரகர்கள் இருக்கும் வரையிலும், வீட்டு வேலைகளுக்காகத் தங்களுடைய பிள்ளைகளை அனுப்பிவைக்கும் பெற்றோர்களும் உறவினர்களும் இருக்கும் வரையிலும், மஸ்கெலியா, மொக்கா தோட்டத்தைச் சேர்ந்த சிறுமியின் உயிரிழப்பு இறுதியானதாக இருக்காது.

டயகம சிறுமி ஹிஷாலினியின் மர்மச் சாவுக்குப் பின்னர், பல்வேறு தரப்பினரும் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தினர். சமூகத்தின்பால் அக்கறை கொண்டவர்கள் அனைவரும், "வீட்டு வேலைக்களுக்காக எங்களுடைய தோட்டத்தில் இருந்து, சிறுமிகளை அனுப்பமாட்டோம்" எனச் சபதமும் எடுத்திருந்தனர். அந்தச் சபதமும் காற்றோடு கலந்துவிட்டது.

பாடசாலைகளில் இருந்து இடைவிலகுவோரைக் கணக்கிட்டு, அவர்களை மீளவும் பாடசாலைகளில் சேர்ப்பதற்கு வழிசமைக்கப்படுமென அரசியல்வாதிகள் அறிக்கைகளை விட்டனர். அவ்வாறான அறிக்கைகளை இன்னுமே விட்டுக்கொண்டுதான் இருக்கின்றனரே தவிர, செயற்பாடுகள் எவையும் இல்லை.

நல்லமுறையில் கல்விகற்று, சமூகத்திலிருந்து வெளியேறிவிட்டால், தங்களுடைய இருப்பு கேள்விக்குறியாகிவிடும் என்பது, அரசியல்வாதிகளிடம் நிலைகொண்டிருக்கும் பெரும் பயமாகும். அப்பயத்தைக் களைய வேண்டுமாயின், மலையகத்தில் தொழிற்றுறைகளை உருவாக்கவேண்டும். வருமானம் ஈட்டி, முன்னேறிச் செல்லும் வகையில் திட்டங்களை வகுக்கவேண்டும்.

ஓர் அரசியல்வாதியின் இருப்பு, அந்தச் சமூகத்தை சார்ந்தவர்களின் கைகளிலேயே இருக்கிறது. ஆகையால், பெருந்தோட்ட மக்களினதும் அரசியல்வாதிகளினதும் சிந்தனையில் மாற்றங்கள் ஏற்படவேண்டும்.

இல்லையேல், வீட்டு வேலைகளுக்காகச் சிறுமிகளை அனுப்புவதற்கு எதிராக, அவ்வப்போது சபதம் எடுப்பதையும் போராட்டங்களை நடத்துவதையும் அறிக்கைகளை விடுவதையும், தவிர்க்கவே முடியாது என்பதை நினைவூட்டுகின்றோம்.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# அரசாங்கத்துக்குள் பனிப்போர்



எம். எஸ். எம் ஐயூப்

மக்கள் விடுதலை முன்னணி தவிர்ந்த சகல தென்பகுதி அரசியல் கட்சிகளும், சர்வகட்சி அரசாங்கம் ஒன்றைப் பற்றி விவாதித்துக் கொண்டு இருக்கின்றன. ஆனால், அது நடைமுறைச் சாத்தியமற்றது என்பது, இப்போது புலனாகி வருகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதைப் பற்றி ஏனைய அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வந்தாலும், அவரது பாணியில், சர்வகட்சி அரசாங்கம் கைகூடாத வகையிலும் நடந்து கொள்வதாகவே தெரிகிறது. ஆரம்பத்தில், அரசாங்கத்தில் இணைய சாடையாக விருப்பத்தைத் தெரிவித்து வந்த சில எதிர்க்கட்சிகளும், இப்போது விடாப்பிடியாக சர்வகட்சி அரசாங்கம் ஒன்றுக்கான வேலைதிட்டத்தை கேட்டுக் கொண்டே இருக்கின்றன. ஜனாதிபதி அதைக் காதில் போட்டுக் கொள்ள விரும்பவில்லை.

ஜனாதிபதி ரணில், அரசியல் தந்திரங்களில் தேர்ச்சி பெற்றவர். எனவேதான், பொருளாதார நெருக்கடியின் காரணமாக, செய்வதறியாது இருந்த முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய, பிரதமர் பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு மே மாதம் அழைப்புவிடுத்த போது, நாடாளுமன்றத்தில் ஓர் ஆசனத்தை வைத்துக் கொண்டும், அவர் அதனை ஏற்றுக் கொண்டார்.

ஆனால், பின்னர் மக்கள் போராட்டத்தை அடக்க நடவடிக்கை எடுத்த ரணில், அதற்காக ஜனாதிபதி கோட்டாபயவை தூண்டவில்லை. மாறாக, போராட்டத்துக்கு ஆதரவளிப்பதாகவே ரணில் கூறினார். அப்போது அது கிண்டலாக பலருக்கு தெரிந்தாலும், அவர் உண்மையிலேயே போராட்டம் வலுவடைவதை விரும்பியிருக்கிறார்.

ஏனெனில், போராட்டத்தின் காரணமாக கோட்டா பதவியிலிருந்து தூக்கி எறியப்பட்டால், தமக்கே ஜனாதிபதியாவதற்கான அதிக வாய்ப்பு இருக்கிறது என்பது அவருக்குத் தெரியும்.

அதேபோல், அவர் சர்வகட்சி அரசாங்கம் என்ற கருத்தையும் மற்றவர்களை மடக்க மிகச் சாதுரியமாகப் பாவித்துள்ளார். மக்கள் ஆர்ப்பாட்டங்கள் காரணமாக, ஜூலை ஒன்பதாம் திகதி, ஜனாதிபதி பதவியைத் தாம் இராஜினாமாச் செய்வதாக கோட்டாபய அறிவித்த போது, பிரதமர் ரணிலும் இராஜினாமாச் செய்ய வேண்டும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரினர். இதனை அடுத்து, நாடாளுமன்றத்தின் கட்சித் தலைவர்களின் கூட்டத்திலும் அந்தக் கோரிக்கை ஆராயப்பட்டு, பிரதமரும் இராஜினாமாச் செய்ய வேண்டும் என்று ஜூலை 10ஆம் திகதி முடிவு செய்யப்பட்டது.

அது, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவால், அவருக்கு அன்றே அறிவிக்கப்பட்டது. அப்போது ரணில், "சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் நடைபெறவிருக்கும் நிலையில், அரசாங்கம் ஒன்று இல்லாத நிலை, நாட்டில் இருக்க முடியாது. எனவே, கட்சித் தலைவர்கள் சர்வகட்சி அரசாங்கத்தை அமைத்தவுடன் நான் இராஜினாமாச் செய்கிறேன்" எனத் தெரிவித்தார்.

இதனிடையே, ஜூலை 12ஆம் திகதி, கோட்டா இராஜினாமாச் செய்தார். ரணில் பதில் ஜனாதிபதியானார். சர்வகட்சி அரசாங்கம் என்பது, இழுபறியில் இருக்கும் நிலையில், நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் நடைபெற்றது. அதில் அவர் வெற்றி பெற்றார். அதனை அடுத்து, அவர் போராட்டக்காரர்களுக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டத்தை பாவித்து, கடும் அடக்குமுறையை கட்டவிழ்த்தார். அத்தோடு அவர் இராஜினாமாச் செய்ய வேண்டும் என்ற கூச்சலும் மறைந்துவிட்டது.

இப்போதும் அவர், சர்வகட்சி அரசாங்கம் என்ற விடயத்தைக் காட்டி, மிகச் சாதுரியமாக ஏனைய கட்சிகளின் கவனத்தை திசைதிருப்பி வருகிறார். எனினும், இந்தத் தந்திரம் இப்போது சில கட்சிகளுக்கு தெரிந்துவிட்டது.

இதனை தமக்குச் சாதகமாக பாவித்துக் கொள்ள, பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர்கள் முயல்கிறார்கள். அதன்படி, சர்வகட்சி அரசாங்கம் நடைமுறைச் சாத்தியமாகாவிட்டால், பொதுஜன பெரமுனவுக்கு அமைச்சரவையை நியமிக்க இடமளிக்குமாறு பசில் கூறியிருக்கிறார்.

இதனிடையே, ஜனாதிபதிக்கும் பொதுஜன பெரமுனவுக்கும் இடையிலான கருத்து வேறுபாடுகள், சிறிது சிறிதாக தலைதூக்க ஆரம்பித்துள்ளன. அவருக்கும் அக்கட்சிக்கும் இடையே கொள்கை ரீதியான அடிப்படை வேறுபாடுகள் இல்லாவிட்டாலும், சில நடைமுறை வேறுபாடுகள் இருக்கின்றன.

ஜனாதிபதியின் கட்சியான ஐக்கிய தேசிய கட்சியும் பொதுஜன பெரமுனவும் கண்மூடித்தனமாக, தாராள பொருளாதார கொள்கையை கடைப்பிடிக்கும் கட்சிகள். இரு கட்சிகளின் தலைவர்களும், கடந்த காலத்தில் நாட்டை கடன்கார நாடாக மாற்றியதில் பெரும் பங்கை ஆற்றியவர்கள். இரு கட்சிகளின் ஆட்சிக் காலங்களிலும், நாட்டில் பாரியளவில் ஊழல்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் ஈடுபட்டவர்கள் ஆட்சி மாறிய காலத்திலாவது சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை. அதைத் தான் "அவர்கள் எல்லோரும் நண்பர்கள் தம்பி; நாட்டில் ஒருபோதும் எந்தவொரு பெரிய திருடனும் கைது செய்யப்பட மாட்டான்" என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க ஒருமுறை ஊடகவியலாளரிடம் கூறினார்.

இனப்பிரச்சினை விடயத்தில், நடவடிக்கை எடுக்கும் போதும் எந்தவொரு பிரதான கட்சியும் பெரும்பான்மை ஆதிக்கவாதத்தை மீறத் தயாராக இல்லை.

எனவே, இவ்விரண்டு கட்சிகளும் ஒன்றுதான். ஆனால், இவ்விரு கட்சிகளிடையே சில நடைமுறை வேறுபாடுகள் இருக்கின்றன. மேற்கத்தேய ஆதிக்கத்தை, ஐ.தே.க கூடுதலாக ஆதரிக்கும் கட்சியாகும். அண்மைக் காலத்தில், இதில் சில மாற்றங்களும் இல்லாமல் இல்லை.

பொதுஜன பெரமுன, சீனாவை கண்மூடித்தனமாக ஆதரிக்கும் கட்சியாகும். சீனாவின் கடன் பொறியில் இலங்கை சிக்குவதற்கு அதுவும் ஒரு பலமான காரணமாகும். அவற்றுக்குப் புறம்பாக, இரு கட்சிகளுக்கிடையே அதிகாரப் போட்டி மனப்பான்மையும் இருக்கிறது.

அந்த நிலையில் தான், பொதுஜன பெரமுனவின் ஆதரவில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செயயப்பட்டுள்ளார். இது தற்காலிக ஏற்பாடாகும். ரணிலுக்கு தமது கட்சியின் மேம்பாட்டுக்காகவும் தமது சொந்த மேம்பாட்டுக்காகவும் ஜனாதிபதியாகும் அவசியம் இருந்தது. மக்களின் எழுச்சியின் காரணமாகப் பின்வாங்கிய பொதுஜன பெரமுனவுக்கு, தற்காலிகமாக தமக்காக ஆட்சியைப் பிடித்து வைத்திருக்கத்தக்க ஒருவர் தேவைப்பட்டது. அதன் விளைவாகவே, ஜூலை 20ஆம் திகதி பொதுஜன பெரமுனவின் ஆதரவில், ரணில் ஜனாதிபதியாக நாடாளுமன்றத்தால் தெரிவு செய்யப்பட்டார்.

இப்போது, தமது கட்சியைப் பலப்படுத்த ரணில் ஜனாதிபதி பதவியை பாவிக்கிறார். பொதுஜன பெரமுனவும் தாம் இழந்த அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றிக் கொள்ள முயன்று வருகிறது.

இதனால், ஏற்கெனவே சில முரண்பாடுகள் தோன்ற ஆரம்பித்துள்ளன. இந்தப் பனிப்போரின் போது, நிறைவேற்று அதிகாரம் என்ற ஆயுதம் ஜனாதிபதியிடம் இருக்கிறது. ஜனாதிபதியின் திட்டங்களை நாடாளுமன்றத்தில் தோல்வியுறச் செய்யும் பெரும்பான்மை பலம், பொதுஜன பெரமுனவிடம் இருக்கிறது.

ஜனாதிபதி பதவியை ஏற்றவுடனேயே, ரணில் விக்கிரமசிங்க தமது கட்சியைச் சேர்ந்த தலைவர்களை, தமது ஆலோசகர்களாக நியமித்துக் கொண்டார். அதேவேளை, அவர்களுக்கு சில துறைகளில் முக்கிய பொறுப்புகளையும் வழங்கினார். அவர்களும் அமைச்சர்களைப் போல் தான் செயற்படுகிறார்கள்.

திங்கட்கிழமை (22) வடமத்திய மாகாணத்துக்குச் சென்ற ஜனாதிபதி, அம் மாகாண பிரதம மகாநாயக்க பல்லேகம சிறிநிவாச தேரரை சந்தித்த போது, உரமானியம் வழங்குவது தொடர்பாக கருத்துத் தெரிவித்தார்.

அப்போது, அதனை விவரிக்குமாறு, அவர் தமது சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்னாயக்கவை கேட்டுக் கொண்டார். உரமானியம் வழங்குவதற்காக உலக வங்கியோடு பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருப்பதாக சாகல கூறினார். நாட்டைப் பொறுத்தவரை அதில் ஏதும் தவறில்லை. ஆனால், ஜனாதிபதியின் ஆலோசகர்கள் அமைச்சர்களைப் போல் நடந்து கொள்வது, இரு கட்சிகளிடையே முறுகல் நிலைக்கு வித்திடலாம்.

பொதுஜன பெரமுன, பெரும்பான்மையின மக்களின் வாக்குகளையே நம்பியிருக்கிறது. அதற்காகக் கடந்த தேர்தல் காலங்களில், சிறுபான்மை மக்களுக்கு எதிராக, குறிப்பாக முஸ்லிம்களுக்கு எதிராக பயங்கரமாக இனவாதத்தைப் பாவித்தது.

ஆனால், ஐ.தே.க சிறுபான்மையினரின் ஆதரவையும் எதிர்பார்க்கிறது. எதிர்வரும் தேர்தல்களின் போது, மீண்டும் இனவாதத்தைத் தூண்டும் நோக்கத்துடனேயே முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கடும் இனவாதியான கலகோட அத்தே ஞானசார தேரர் தலைமையில், 'ஒரே நாடு; ஒரே சட்டம்' என்ற வாதத்தை அமலாக்குவதற்கான பரிந்துரைகளை முன்வைக்க, செயலணி ஒன்றை நியமித்தார். ஜனாதிபதி ரணில், இந்தச் செயலணியின் அறிக்கையை ஏற்க மறுத்ததாக செய்திகள் கூறின.

ஜனாதிபதி கோட்டாபய, 2021ஆம் ஆண்டு, பல புலம்பெயர் தமிழ் அமைப்புகளையும் நபர்களையும் தடைப் பட்டியலில் சேர்த்தார். ஜனாதிபதி ரணில், ஒகஸ்ட் முதலாம் திகதி அவற்றில் ஆறு அமைப்புகளையும் 316 நபர்களையும் அப்பட்டியலில் இருந்து நீக்கினார்.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த 'நல்லாட்சி' அரசாங்கத்தின் காலத்தில், அரசியல் பழிவாங்கலுக்கு இலக்காகியதாக கூறப்படும் சில நபர்களுக்கு, நட்டஈடு வழங்க வேண்டும் என்று அண்மையில் பொதுஜன பெரமுன கூறியிருந்தது. இதனை ரணில் ஏற்றுக் கொண்டால், அவரது காலத்தில் அரசியல் பழிவாங்கலுக்கு இலக்காகியதாக, அவரே அவர்களுக்கு நட்டஈடு வழங்கும் மிக விந்தையான நிலைமை உருவாகும். இதுவும் இரு சாராருக்கிடையே முரண்பாட்டை வலுக்கச் செய்யும் விடயமாகும்.

சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்பட்டாலும் இல்லாவிட்டாலும், தமது கட்சியால் பரிந்துரை செய்யப்படுவோருக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட வேண்டும் என்று பொதுஜன பெரமுன விடாப்பிடியாக இருப்பதாகத் தெரிகிறது. அந்தக் கருத்தை ஜனாதிபதி நிராகரித்ததாகவும் சில செய்திகள் கூறுகின்றன.

இவை அனைத்தும், புதிய கொந்தளிப்புகளைத் தோற்றுவிக்கும் விடயங்களாகும். பாரியதொரு பொருளாதார நெருக்கடியின் மத்தியிலேயே ஜனாதிபதி இவற்றை சமாளிக்கப் போகிறார்.



## வாழ்வியல் தரிசனம்

தாங்கள் சொல்வதைத்தான் மக்கள் கேட்டு நடக்க வேண்டும் என, எந்த அரசாங்கமும் நினைக்கக்கூடாது. புத்திசாலிகள், பலசாலிகள், மேதாவிகள், ஆன்மிகவாதிகள், பல மொழி, மதம், இனம், நிறங்களைக் கொண்டது இந்த உலகம்.

இவ்வாறிருக்க, சிலரின் அரசியல் நடத்தைகளை மக்கள் விரும்புவதில்லை. ஆனால், பல நாடுகள் பேதங்களை மறந்து, சகலரையும் இணைத்துக்கொண்டு, சுதந்திரமாக வாழும் போக்கைக் கடைப்பிடிக்கின்றன. அதனால்தான், இத்தகைய நாடுகள், மிகவும் அதிசயிக்கத்தக்க வளர்ச்சியை அடைந்துள்ளன. தகுதியுடையவர் எவரோ, அவரை ஏற்றுக்கொள்கிறார்கள். மிகப்பெரும் வல்லரசு நாடுகளின் ஆட்சியின் தலைமைத்துவத்தில், சிறுபான்மைச் சமூகங்களுக்கும் இடமளிக்கப்படுகின்றது.

தேசம் உயர்வடைய வேண்டும் என்பதே, அரசின் குறிக்கோளாக இருக்கவேண்டும். "இது எனது தேசம்" என, இறுமாப்புடன் அனைவரும் சொல்ல வேண்டும்.

தாய் மண்ணில், அனைவரும் ஒரே பிள்ளைகள் ஆவோம். பேதம், குரோதம் சரிந்து அழிந்தாலேயே, உலகின் உயிர்ப்பை மக்கள் தரிசிக்க முடியும். கடவுள் உருவாக்கிய உலகைக் கரைக்க எண்ணலாகாது.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்


### திருக்கோவிலில் பாரிய கடல் அரிப்பு

அம்பாறை மாவட்டம், திருக்கோவில் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட, தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்துக்கு முன்னாலுள்ள கடல் பகுதியும் திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி கோவிலுக்கு முன்னால் உள்ள கடல் பகுதியும் பாரிய கடலரிப்புக்கு இலக்காகி வருகின்றன.

கடந்த ஒரு வார காலமாக, மிகவும் ஆக்ரோசமாக இடம்பெற்று வரும் இந்தக் கடல் அரிப்பில், நூற்றுக்கணக்கான தென்னை மரங்கள் அடித்து செல்லப்பட்டு இருக்கின்றன. அதுபோல, ஏனைய மரங்களையும் கடல் காவு கொண்டுவருகின்றது. சுமார் 100 அடி வரையிலான நிலப்பரப்பு, கடலுக்குள் காவுகொள்ளப்பட்டு இருக்கின்றது.

மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை. அவர்களது மீன்பிடி வள்ளங்களை, கரையை விட்டு நகர்த்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. கடலரிப்பை தடுத்து நிறுத்த வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றார்கள்.

வி. ரி சகாதேவராஜா





# அமைச்சரவை தீர்மானங்கள்

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் திங்கட்கிழமை (22) நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் சில...**

### Cyber பாதுகாப்புக் கொள்கை

அரச நிறுவனங்கள் டிஜிட்டல் முறைமையில் செயற்படுகின்ற நிலைமை அதிகமாகக் காணப்பட்டாலும், தகவல் மற்றும் இணையப் பாதுகாப்பு தொடர்பான போதியளவு கவனம் செலுத்தாமை, காலங்கடந்த தொழில்நுட்பப் பயன்பாடு மற்றும் அரச துறையில் இணையப் பாதுகாப்பு முகாமைத்துவத்திற்குத் தேவையான திறன்வாய்ந்த பணியாளர்களின் பற்றாக்குறை போன்றவற்றால், அந்நிறுவனங்களின் தகவல் மற்றும் தகவல் தொழில்நுட்ப தொகுதிகள் பாரிய இடர்களை எதிர்கொண்டுள்ளன.

இந்நிலைமைகளைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கை கணினி அவசரப் பதிலளிப்புக் குழுவால் (SLCERT), இலங்கையில் 2019-2023 தகவல் மற்றும் இணையப் பாதுகாப்பு மூலோபாயம் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச தகவல் பாதுகாப்பு தரநிர்ணயங்களுக்கு அமைவாக அரச நிறுவனங்களுக்கான தகவல் மற்றும் இணையப் பாதுகாப்பு கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 'பகிரங்க அதிகாரசபைகள்' என வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து அரச நிறுவனங்களும் இக்கொள்கையை நடைமுறைப்படுத்தல் கட்டாயமானதாகும். அதற்கமைய, அரச நிறுவனங்களுக்காக முன்மொழியப்பட்டுள்ள தகவல் மற்றும் இணையப் பாதுகாப்புக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான யோசனைக்கு அங்கிகாரம்.

### புரிந்துணர்வு ஒப்பந்தம்

விவசாயத் துறையில் பங்களிப்பு தொடர்பாக ஓமான் சுல்தான் அரசின் விவசாய, கடல் வளங்கள் மற்றும் நீர் வளங்கள் அமைச்சு மற்றும் எமது நாட்டின் விவசாய அமைச்சுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதற்காக முன்மொழியப்பட்டுள்ள ஒப்பந்த வரைபுக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. அதற்கமைய, குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கான யோசனைக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### சட்டத்தை திருத்தம் செய்தல்

சர்வதேச விமானப் போக்குவரத்துக்காக, வானூர்தி மூலம் ஏற்றிச் செல்லலுக்கான குறித்த சில விதிகளை ஒன்றாக்குவதற்கான (Montreal) சமவாயத்தின் கீழ் சர்வதேச வானூர்தி மூலம் ஏற்றிச் செல்லலுக்கான வரையறைகள் 2021.01.22 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளதுடன், குறித்த பொறுப்பு வரையறைகள், இலங்கையில் வானூர்தி மூலம் ஏற்றிச் செல்லல் தொழிற்றுறையின் முன்னேற்றத்துக்குத் தடையாக இருக்கக்கூடுமெனக் கண்டறியப்பட்டுள்ளது.

அதனால், உள்ளூர் வானூர்தி மூலம் ஏற்றிச் செல்லல் தொழிற்றுறையை குறித்த பொறுப்பு வரையறைகளிலிருந்து விடுவிப்பதற்கு இயலுமாகும் வகையில், 2018ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க வானூர்தி மூலம் ஏற்றிச் செல்லல் சட்டத்தில் ஏற்புடைய பொறுப்பு வரையறைகளை மீளாய்வு செய்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அக்குழு திருத்தங்கள் சிலவற்றை பரிந்துரைத்துள்ளது. அதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### சமகாலத் தேவைகளுக்கமைய திருத்தம் செய்தல்

அரச மரக்கூட்டுத்தாபனத்தின் கருமங்கள் சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய தேவை அடையாளம் காணப்பட்டுள்ளது. விடயத்தலைப்பு சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான யோசனைக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

போதைப்பொருளில் தங்கி வாழ்பவர்கள், யுத்தத்தில் ஈடுபட்ட போராளிகள், வன்முறைமிக்க தீவிரவாதக் குழுக்களின் அங்கத்தவர்கள் மற்றும் வேறு ஏற்புடைய நபர்களுக்கான சிகிச்சையளித்தல், புனர்வாழ்வளித்தல், பின்னரான பாதுகாப்பு, அதனுடன் தொடர்புடைய கருமங்களை ஆற்றுவதற்காக புனர்வாழ்வு செயலகமொன்றை நிறுவுவதற்கான சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்காக 2021.04.19 அன்று இடம்பெற்ற அமைச்சரவையில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கிகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கான யோசனைக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### மாணவர் கடன் முறையொன்றை நிறுவுதல்

க.பொ.த (உயர்தர) பரீட்சை மூலம் தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு தெரிவு செய்யப்பட்டு 02 வருடங்கள் கல்விசார் பயிற்சிகளிலும் ஒரு வருடம் உள்ளகப் பயிற்சியும் வழங்கப்பட்டு ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்படுகின்றனர். ஒரு வருடகால உள்ளகப் பயிற்சிக்காக கல்வியியல் கல்லூரிகளில் தங்குமிடம் வழங்கப்படாததுடன், தங்குமிடம் மற்றும் போக்குவரத்துச் செலவுகளை ஆசிரிய பயிலுநர்கள் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

தற்போது ஆசிரிய பயிலுநர் ஒருவருக்கு கல்விசார் பயிற்சியின் போது செலுத்தப்படும் 5,000/- ரூபாய் கொடுப்பனவு போதுமானதாக இல்லை. அதனால், ஆசிரிய பயிலுநர்களுக்கு தற்போது கிடைக்கின்ற கொடுப்பனவுக்கு மேலதிகமாக மாதமொன்றுக்கு உயர்ந்தபட்சம் மேலும் 10,000/- நிதி வசதியை சலுகை வட்டி அடிப்படையில் அரச வங்கியொன்றினூடாகப் பெற்றுக் கொள்வதற்கு இயலுமாகும் வகையில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான யோசனைக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### பாடசாலை சீருடை வழங்கல்

2023 ஆம் ஆண்டுக்கான சீருடைத்துணி 2022 ஆம் ஆண்டு பாடசாலை இறுதித் தவணைக்கு முன்னர் மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். இலங்கை அரசாங்கத்தால் சீனக் குடியரசுக்கு விண்ணப்பிக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க, 2023 ஆம் ஆண்டுக்கான பாடசாலைச் சீருடைத்துணித் தேவையின் ஒருபகுதியை இலவசமாக வழங்குவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சீனக் குடியரசால் வழங்கப்படும் சீருடைத்துணிக்கு மேலதிகமான தேவையை உள்ளூர் துணி உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்து, 2023 ஆம் ஆண்டுக்கான பாடசாலை சீருடைத் துணித் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்கான யோசனைக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### கூட்டுத்தாபனத்துக்கு வழங்கல்

இலங்கை ரயில்வே திணைக்களத்தின் அத்தியாவசிய சிவில் வேலைகள் மற்றும் சமிக்ஞை தொகுதி வேலைகளுக்குத் தேவையான உழைப்புப் படையணியில் பற்றாக்குறை காணப்படுவதால் ரயில்வே சேவைகளை சரியான வகையில் மேற்கொண்டு செல்வதில் பல பிரச்சினைகள் தோன்றியுள்ளன.

குறித்த பிரச்சினைகளுக்குத் தீர்வாக, அவ்வாறான கட்டுமானங்கள் தொடர்பாக சிறந்த அனுபவங்களுடன் கூடிய 600 இற்கும் அதிகமான உழைப்புப் படையணியுடன் தற்போது இயங்கி வருகின்ற அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனத்திற்கு 25 மில்லியன் ரூபாய் தொகையை விடவும் அதிகரிக்காத ஒப்பந்தங்களை நேரடி விலைமனுக் கோரல் பொறிமுறையைக் கையாண்டு வழங்குவதற்கான யோசனைக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### சூரிய மின்கல கருத்திட்டம்

குச்சவெளிப் பிரதேச செயலகத்தில் அமைந்துள்ள இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சிற்றலை ஒலிபரப்பு நிலையத்தை நடத்திச் செல்கின்ற காணியில் சூரிய மின்கல மின்னுற்பத்திக் கருத்திட்டமொன்றை மேற்கொள்வதற்காக 2022.01.18 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, பொருத்தமான முதலீட்டாளர்களைத் தெரிவு செய்வதற்கான கருத்திட்ட முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளதுடன், 07 முன்மொழிகள் கிடைக்கப் பெற்றுள்ளன. குறித்த முன்மொழிவுகளை மதிப்பீடு செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவால் குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான முதலீட்டாளராக 3W Power Management Ltd நிறுவனம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த முதலீட்டாளர்களுடன் இணைந்து, முன்மொழியப்பட்டுள்ள கருத்திட்ட யோசனையை நடைமுறைப்படுத்துவதற்கான யோசனைக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### யூரியா பெறுகை கோரல்

2022 ஜூன் மாதம் 07 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்துக்கு அமைய 2022/23 பெரும்போகச் செய்கைக்கான யூரியா உரக் கொள்வனவுக்காக, குறித்த பெறுகை கோரல் செயன்முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அப்பெறுகை கோரல் மூலம் 150,000 மெற்றிக் தொன் யூரியா உரம் பெறுகைக்குத் திட்டமிடப்பட்டிருப்பினும், அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகை குழுவால் பரிந்துரைக்கப்பட்டுள்ள விலைமனுதாரரால் 12,500 மெற்றிக்தொன் யூரியா உரத்தை மாத்திரமே விநியோகிப்பதற்கு விலைமனுக் கோரல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த யூரியா உரத்தைக் கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தத்தை வழங்குவதற்கும், மேலும் 125,000 மெற்றிக் தொன் யூரியா உரத்தைத் துரிதமாகக் கொள்வனவு செய்வதற்காக இலத்திரனியல் (e-procurement) பொறிமுறையைக் கையாண்டு மீண்டும் விலைமனுக் கோரலைப் பெறுவதற்குமான யோசனைக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

---

சென்னை

## இலங்கை கடற்படையினரின் அத்துமீறலுக்கு

# முடிவு கட்ட வேண்டும்



"இலங்கை சிறையில் வாடும் கீச்சாங்குப்பம் மீனவர்கள் 9 பேரையும், இப்போது கைது செய்யப்பட்டுள்ள அக்கரைப்பேட்டை மீனவர்கள் 10 பேரையும் அவர்களின் படகுகளுடன் மீட்டு வர மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் (பா.ம.க) ராமதாஸ் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது ட்விட்டர் பக்கத்தில், 'நாகை மாவட்டம், அக்கரைப்பேட்டை மீனவர்கள் 10 பேர், வங்கக்கடலில், கோடியக்கரை அருகில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, இலங்கை படையினரால், சட்டவிரோதமாக துப்பாக்கி முனையில் கைது செய்யப்பட்டுள்ளனர். இலங்கை படையினரின் இந்த அத்துமீறல் கண்டிக்கத்தக்கது.

தமிழக மீனவர்களை இலங்கை படை கைது செய்வது தொடர்கதையாகி வருகிறது. கடந்த இரு மாதங்களில் நடந்துள்ள ஆறாவது கைது இதுவாகும். இதுவரை மொத்தம் 48 மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்திருக்கிறது. அவர்களின் 6 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இலங்கை கடற்படையினரின் கைது நடவடிக்கைகள் சட்டவிரோதமானவை. இலங்கை கடற்படையினரின் இந்த நடவடிக்கைக்கு தமிழகத்திலிருந்து கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டும் கூட, அதை இலங்கை அரசு மதிக்கவில்லை. இலங்கை அரசின் அகங்காரத்துக்கும், அத்துமீறலுக்கும் முடிவு கட்டப்பட வேண்டும்.


கடந்த ஆறாம் திகதி கைது செய்யப்பட்டு இலங்கை சிறையில் வாடும் கீச்சாங்குப்பம் மீனவர்கள் 9 பேரையும், இப்போது கைது செய்யப்பட்டுள்ள அக்கரைப்பேட்டை மீனவர்கள் 10 பேரையும் அவர்களின் படகுகளுடன் மீட்டு வர மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அவர் பதிவிட்டுள்ளார்.

---

சென்னை

## அ.தி.மு.க விவகார வழக்கு:

# வியாழன் விசாரணை



அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் (அ.தி.மு.க) பொதுக்குழு செல்லாது என்ற தனி நீதிபதியின் உத்தரவை எதிர்த்து, எடப்பாடி பழனிசாமி தாக்கல் செய்துள்ள மேன்முறையீட்டு வழக்கின் விசாரணையை வரும் வியாழக்கிழமைக்கு (25) சென்னை உயர்நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

அ.தி.மு.க பொதுக்குழுவை எதிர்த்து முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், அ.தி.மு.க பொதுக்குழு உறுப்பினர் வைரமுத்து ஆகியோர் தாக்கல் செய்த மனுக்களை விசாரித்த சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஜெயச்சந்திரன், "ஜூலை 11ஆம் திகதி நடந்த அ.தி.மு.க பொதுக்குழு செல்லாது. அ.தி.மு.கவில் கடந்த ஜூன் 23ஆம் திகதிக்கு முன்பு இருந்த நிலையே நீடிக்க வேண்டும்" என்று தீர்ப்பளித்திருந்தார்.


இந்தத் தீர்ப்பை எதிர்த்து, எடப்பாடி பழனிசாமி தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது.

அந்த மனுவில், "தனி நீதிபதி தனது அதிகாரத்தின் வரம்பை மீறி இந்த உத்தரவை பிறப்பித்திருக்கிறார். இந்த வழக்கின் கோரிக்கையே ஜூலை 11ஆம் திகதி பொதுக்குழுக் கூட்டத்திற்கு தடை விதிக்க வேண்டும் என்பதுதான். எனவே, ஜூன் 23ஆம் திகதிக்கு முன்பு இருந்த நிலையே தொடர வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்திருப்பது தவறு என அறிவிக்குமாறு எடப்பாடி பழனிசாமி தாக்கல் செய்துள்ள மேன்முறையீட்டு மனு மீதான விசாரணையே ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

---

நாகர்கோவில்

# சிரிப்பை வென்ற பாட்டிக்கு வீடு



தமிழக அரசு வழங்கிய பொங்கல் தொகுப்பு பரிசு பொருட்களை, கையில் வைத்துக் கொண்டு 'பொக்கை வாய்' சிரிப்புடன் இருந்த படம் மூலம் பிரபலமானவர், நாகர்கோவிலைச் சேர்ந்த வேலம்மாள் பாட்டி.

இந்தப் படத்தை சமூக வலைதளத்தில் வெளியிட்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், 'ஏழைத் தாய்மார்களின் சிரிப்பே நமது அரசின் சிரிப்பு' என கருத்து தெரிவித்து இருந்தார்.

நாகர்கோவிலுக்கு வந்திருந்த முதலமைச்சர், வேலம்மாள் பாட்டியையும் நேரில் சந்தித்தார்.

அப்போது தனக்கு இலவச வீடும், முதியோர் ஒய்வூதியமும் வழங்க வேண்டும் என வேலம்மாள் பாட்டி கோரிக்கை விடுத்தார். இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பணித்தார்.

அதன்பிரகாரம், முதலில் முதியோர் ஒய்வூதியமும், பின்னர் இலவச வீடும் வழங்கப்பட்டது.


அவற்றை பெற்றுக்கொண்ட வேலம்மாள் பாட்டி, மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார். "ஏழைகளின் குறைகளை உடனுக்குடன் தீர்த்து வைக்கும் முதலமைச்சரை பாராட்டுகிறேன்" என்றார்.

---

இந்தியா

## பாலியல் குற்றங்களுக்கு

# 100 நாள்களுக்குள் தீர்ப்பை வழங்கவும்



பாலியல் குற்றங்களுக்கு எதிரான தண்டனைகளை கடுமையாக்கவும், பாலியல் குற்ற வழக்குகளில் 100 நாள்களுக்குள் தீர்ப்பு வழங்கப்படுவதை உறுதிசெய்யவும் மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ள பாட்டாளி மக்கள் கட்சியின் (பா.ம.க) தலைவர் அன்புமணி ராமதாஸ், பெண்களையும் குழந்தைகளையும் பாதுகாக்க வேண்டுமென கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் இட்டுள்ள டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டிருப்பதாவது:

தேனி மாவட்டம் எரசக்கநாயனூரில் ஜூலை இரண்டாம் திகதி பாலியல் வன்கொடுமை முயற்சியை எதிர்த்ததால் கொடியவன் ஒருவனால் தீயிட்டு எரிக்கப்பட்ட ஏழு வயது சிறுமி, ஒரு மாத உயிர்ப் போராட்டத்துக்குப் பிறகு உயிரிழந்திருப்பது மிகுந்த வேதனை அளிக்கிறது.

அவரது குடும்பத்துக்கு அனுதாபங்கள்; ஏழு வயது சிறுமிக்கு இழைக்கப்பட்ட பாலியல் சீண்டலுக்கும், ஒரு மாதமாக துடிதுடித்து, இப்போது உயிரிழந்திருப்பதற்கும் காரணம், அந்தச் சிறுமியை சிதைக்க முயன்ற கொடியவன், கஞ்சா போதையில் இருந்ததுதான் எனக் கண்டறியப்பட்டு உள்ளது.

பாலியல் குற்றங்களை செய்தால், தண்டனை பெறாமல் தப்பித்து விடலாம் என்ற எண்ணம் நிலவுவது தான் குற்றங்கள் பெருகுவதற்கு இன்னொரு காரணம் ஆகும். பாலியல் குற்றங்களில் ஈடுபட்டால் கடுமையான தண்டனையிலிருந்து தப்பிக்க முடியாது என்ற அச்சத்தை ஏற்படுத்த வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.



## இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# லிவர்பூலை வென்ற யுனைட்டெட்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற லிவர்பூலுடனான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் வென்றது.

யுனைட்டெட் சார்பாக, ஜடோன் சஞ்சோ, மார்க்கஸ் றஷ்ஃபோர்ட் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதுடன், லிவர்பூல் சார்பாகப் பெறப்பட்ட கோலை மொஹமட் சாலா பெற்றார். இப்போட்டியை யுனைட்டெட்டின் நட்சத்திர முன்களவீரரான கிறிஸ்டியானோ றொனால்டோ, அணித்தலைவர் ஹரி மக்குவாயா ஆகியோர் ஆரம்பித்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆசியக் கிண்ணத்துக்கான பாகிஸ்தான் குழாமில்

# அஃப்ரிடியைப் பிரதியிடும் ஹஸ்னைன்



ஆசியக் கிண்ணத்துக்கான பாகிஸ்தான் குழாமில், காயமடைந்துள்ள ஷகீன் ஷா அஃப்ரிடியை மொஹமட் ஹஸ்னைன் பிரதியிடவுள்ளார்.

சந்தேகத்துகிடமானதான பந்துவீச்சுப்பாணியைக் கொண்டிருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பந்துவீசுவதற்கு 22 வயதான ஹஸ்னைக்கு இவ்வாண்டு பெப்ரவரி மாதத்தில் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், தனது பந்துவீச்சுப் பாணியை திருத்தியமையடுத்து மீண்டும் பந்துவீச ஹஸ்னைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தது. எனினும், ஹஸ்னைனின் பந்துவீச்சை மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் கேள்விக்குட்படுத்தியிருந்தார்.




# சிம்பாப்வேயை வெள்ளையடித்தது இந்தியா

சிம்பாப்வேயை ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் இந்தியா வெள்ளையடித்தது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளையும் ஏற்கெனவே வென்றிருந்த இந்தியா, ஹராரேயில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது போட்டியையும் வென்றமையைத் தொடர்ந்தே சிம்பாப்வேயை 3-0 என வெள்ளையடிதது. ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இந்தியா

இந்தியா: 289/8 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஷுப்மன் கில் 130 (97), இஷன் கிஷன் 50 (61), ஷீகர் தவான் 40 (68), லோகேஷ் ராகுல் 30 (46) ஓட்டங்கள். பந்துவீச்சு: பிரட் இவான்ஸ் 5/54, விக்டர் நயுச்சி 1/48)

சிம்பாப்வே: 276/10 (49.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: சிகண்டர் ராசா 115 (95), ஷோன் வில்லியம்ஸ் 45 (46), பிரட் இவான்ஸ் 28 (36) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஆவேஷ் கான் 3/66, அக்ஸர் பட்டேல் 2/30, குல்தீப் யாதவ் 2/38, தீபக் சஹர் 2/75, ஷர்துல் தாக்கூர் 1/55)

போட்டியின் நாயகன்: ஷுப்மன் கில் தொடரின் நாயகன்: ஷுப்மன் கில்



## இத்தாலிய சீரி ஏ தொடர்:

# சமநிலையில் ஜுவென்டஸ் – சம்ப்டோரியா போட்டி

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், சம்ப்டோரியாவின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணிக்கும் ஜுவென்டஸுக்குமிடையிலான போட்டியானது 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

சீனா

# ‘பிறப்புகள், திருமணங்களின் வீழ்ச்சியை கொரோனா மோசமாக்கியது’

கல்வி, குழந்தை வளர்ப்புக்கான உயர் செலவால் அண்மைய ஆண்டுகளில் தீவிரமாகியிருந்த சீனாவின் திருமண, பிறப்பு வீதங்களின் வீழ்ச்சிக்கு கொரோனா வைரஸும் பங்களித்ததாக அந்நாட்டு தேசிய சுகாதார ஆணைக்குழு தெரிவித்துள்ளது.



திருமணம் செய்து கொள்ளும் திட்டங்களையோ அல்லது குழந்தைகள் பெற்றுக் கொள்வதையோ பல பெண்கள் தொடர்ந்தும் தாமதப்படுத்துவதாக குறித்த ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. நகர்ப்புற பகுதிகளுக்கு இளைஞர்கள் நகருவதாகவும், கல்வியில் அதிக நேரம் செலவளிப்பதும், அதிக அழுத்தமாக பணிச்சூழலும் இதற்கு காரணமாய் அமைவதாக ஆணைக்குழு மேலும் கூறியுள்ளது.

கடந்தாண்டு பிறந்த 10.6 மில்லியன் குழந்தைகளை விட இவ்வாண்டு 10 மில்லியனுக்கு குறைவான பிள்ளைகளே பிறக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது 2020ஆம் ஆண்டை விட குறைவாகும்.

# வெள்ளக்காடாகியுள்ள வகுப்புக்குள் கற்கும் மாணவர்கள்

பிலிப்பைன்ஸின் பம்பங்கா மாகாணத்திலுள்ள மகபெபெயில், உயர் நீரோட்டம் காரணமாக வெள்ளக்காடாகியுள்ள பாடசாலையொன்றில், கொரோனா வைரஸ் பரவல் காலமாக நீண்டகாலமாக பௌதிக ரீதியாக இடம்பெறாத வகுப்புகளுக்கு நேற்று முன்தினம் முதன்முறையாக மாணவர்கள் சமூகமளித்துள்ளனர்.



பின்லாந்து

## கொண்டாட்ட காணொளி:

# பிரதமர் போதைப்பொருள் உள்ளெடுக்கவில்லை

நண்பர்களுடன் பின்லாந்துப் பிரதமர் சானா மரின் கொண்டாட்டத்தில் ஈடுபட்ட காணொளியின் பிரசுரத்தைத் தொடர்ந்து அவர் எடுத்துக் கொண்ட போதைப்பொருள் சோதனையில், அவர் எப்போதைப்பொருளையும் எடுத்துக் கொள்ளவில்லை என தெரியவந்துள்ளது.

கொக்கேய்ன், கஞ்சா, ஓபியம் போன்ற வெவ்வேறான போதைப்பொருள்களின் பிரசன்னமிருந்ததா என பிரதமர் மரினின் சிறுநீர் மாதிரியில் சோதிக்கப்பட்டதா என பிரதமர் மரினின் சிறப்பு ஆலோசகர் நேற்று முன்தினம் கூறியுள்ளார்.

காணொளியில் சில கருத்துக்கள் போதைப்பொருள்களைக் குறிப்பவையாகக் காணப்பட்டிருந்தன.

அல்ஹஹோலை அருந்தியிருந்ததாக பிரதமர் மரின் ஒத்துக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



அவுஸ்திரேலியா

## இரகசிய நியமனங்கள் மூலம்

# ‘பொறுப்பான அரசாங்கத்துக்கு பாதகத்தை ஏற்படுத்தியுள்ளார்’

கொரோனா வைரஸ் பரவலின்போது அவுஸ்திரேலியாவின் முன்னாள் பிரதமர் ஸ்கொட் மொறிஸனின் அமைச்சுக்களுக்கான இரகசிய நியமனங்களானமை சட்ட ரீதியாக வலிதானபோதும் கட்டமைப்பு ரீதியாக பொறுப்பான அரசாங்கத்தைப் பாதித்துள்ளது என அந்நாட்டின் சொலிசிற்றர் ஜெனரல் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், சொலிசிற்றர் ஜெனரலின் கருத்துகளானவை அவுஸ்திரேலியாவின் பாராளுமன்ற ஜனநாயத்தை தெளிவாக விமர்சிப்பதாகும் என அவுஸ்திரேலியாவின் தற்போதைய பிரதமர் அந்தோனி அல்பானிஸ் தெரிவித்துள்ளார்.

தவிர, குறித்த விடயம் குறித்து மேலதிக விசாரணை தேவை என தனது அமைச்சரவை இணங்கியுள்ளதாக பிரதமர் அல்பானிஸ் தெரிவித்துள்ளார்.



பங்களாதேஷ்


## சக்தியைச் சேமிப்பதற்காக

# பாடசாலை, அலுவலக மணித்தியாலங்கள் குறைப்பு

மின் தட்டுப்பாட்டைக் குறைப்பதற்காக பாடசாலைகளை மேலுமொரு நாள் மூடவுள்ள பங்களாதேஷ், அலுவலக மணித்தியாலங்களை குறைக்கவுள்ளதாக அந்நாட்டு அரசாங்க அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

தினமும் இரண்டு மணித்தியாலங்கள் மின் வெட்டை கடந்த மாதம் பங்களாதேஷ் ஆரம்பித்திருந்தது.

பெற்றோல் விலைகளை 50 சதவீதத்தால் அரசாங்கம் அதிகரித்தமையைத் தொடர்ந்து அண்மைய வாரங்களில் ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதிக்கு வந்திருந்தனர்.



உக்ரேனிய யுத்தம் காரணமாக எரிபொருளை இறக்குமதி செய்வதற்கான செலவு அதிகரித்துள்ளதுடன், இது பங்களாதேஷின் பொருளாதாரத்திலும், வெளிநாட்டு நாணயக் கையிருப்பிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

முன்னர் வெள்ளிக்கிழமை மாத்திரம் மூடப்படும் பாடசாலைகள், தற்போது சனிக்கிழமையும் மூடப்படவுள்ளதுடன், எட்டு மணித்தியாலங்களிலிருந்து ஏழு மணித்தியாலங்களாக அரசாங்க அலுவலகங்கள், வங்கிகளின் இயங்கும் நேரங்கள் மாற்றப்படவுள்ளன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 24 ஒகஸ்ட் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.